# உளவியல் மூலக் கோட்பாடு

தேசிய உயர் கல்விச் சான்றிதழ்ப் பரீட்சைக்குரியது
(1ஆம் பகுதி)

தேசிய உயர் கல்விச் சான்றிதழ்ப் பரீட்சைக்குரியது

# உளவியல் மூலக் கோட்பாடு

(முதற் பகுதி)

பத்மசிறி த சில்வா

எம். ஏ., பிஎச். டி. (ஹவாய்)

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

முதற் பதிப்பு 1976
இரண்டாம் பதிப்பு 1976

பதிப்புரிமை அரசினர்க்கே

சிங்கள மூலநூல் ஆக்கியவர்:

**கலாநிதி பத்மசிறி த சில்வா**
விரிவுரையாளர்
இலங்கைப் பல்கலைக்கழக பேராதனை வளாகம்

சிங்களத்திலிருந்து மொழிபெயர்த்தவர்:

**ஐ. தம்பிமுத்து**
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
கொழும்பு

பார்வைப்படி திருத்தியவர்:

**ராதா த சில்வா**

මනෝ විද්‍යාවේ මූලිකාංග (දෙමළ)
I වන කොටස

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால்
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில்
அச்சிட்டு வெளியிடப்பட்டது.

මු.ස.–76509
76–දෙ–59 (1000)

# உளவியல் மூலக் கோட்பாடு

(முதற் பகுதி)

# முகவுரை

சிரேட்ட துணைக் கல்வித் தரத்துக்கு 10, 11 ஆம் தரங்களில் கற்பிக்கப்படும் ஈராண்டுப் பாடநெறி—இன்றைய அரசாங்கம் புகுத்தியுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்களில் மூன்றாவது படியாக அமைகிறது. இந்நெறியைப் பயின்றுமுடித்த மாணவர் தேசிய உயர் கல்விச் சான்றிதழ்ப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடைய ராவர்.

இப்பாடநெறி மூன்று பிரிவுகளைக் கொண்டது. அவையாவன,

(அ) கட்டாய பாடங்கள்

(ஆ) விருப்பத்துக்குரிய பாடப்பிரிவுகள்

(இ) திட்டவேலை

சிரேட்ட துணைக் கல்வித் தரத்துக்கான புதிய பாடவிதானம் 59 இற்கும் கூடுதலான பாடங்களைக் கொண்டது. இப்பாடங்களைப் பயிலும்போதும், பயிற்றுவிக்கும்போதும் மாணவரும் ஆசிரியரும் எதிர்நோக்கத்தக்க இடர்ப்பாடுகள் சிலவற்றிலிருந்து அவர்களை விடுவிக்கும் முகமாக பல்வகைப் பாடத்துறைகளில் சிறந்து விளங்கும் அறிஞர்களின் உதவியுடன், நூல்கள் தொகுக்கப்படுகின்றன. இந்நூல்களைத் தவணைக்குத் தவணை நியாயமான விலைகளில் மாணவருக்குக் கிடைக்கச் செய்யும் வகையில், முறைமையான திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பாடங்களில் விசேட பாடநூல்களாக இத்தொகுதிகளைத் தொகுத்து வெளியிடவும் கருதப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் மொழிக்கும் இலக்கியத்துக்கும் மட்டுமே குறிப்பிட்ட சில பாடநூல்கள் சேர்க்கப்பட்டமையாலும், புதிய பாடவிதானம் பழையதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாயிருப்பதாலும், இந்நூல்கள் மாணவருக்கும் ஆசிரியருக்கும் ஒருங்கே வழிகாட்டிகளாக அமையும் என்பதால் இவற்றைத் தயாரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

சிரேட்ட துணைக் கல்வித் தரக்கல்விக்குக் குறித்த நூல்களை வெளியிடத் தேவையில்லை என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஐந்து, ஆறு ஆண்டுகளுள் உலகின் மொத்த அறிவு இருமடங்காகிவிடுமென நம்பப்படுகிறது. எனவே எந்தப் பாடநூலும் முழுமையாகத் தொகுக்கப்பட்டதாகாது; சில வரு

டங்களுள் வழக்கொழிந்தும் விடலாம். பெரும்பாலான நாடுகளி லுள்ள கல்விமான்கள் உயர் கல்விக்கு ஆயத்தப்படுத்தும் மாண வர், தங்கள் அறிவுப் பேற்றுக்கு தனித்த ஒரு நூலில் மட்டும் தங்கியிருப்பதைத் தவிர்த்து, நூல்நிலையங்களைப் பயன்படுத்திப் பிறநூல்கள், புதினத்தாள்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றை வாசித்து அறிவை விரிவாக்கிக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். ஆகவே, மாணவர் தாமாக மேற்கொள்ளவேண்டிய விசேட பணி யொன்று யாதெனில், நூல்கள், சஞ்சிகைகள் வாயிலாகத் தம் அறிவை விருத்திசெய்து கொள்ளலாகும். எனினும் அவ்வாறான நூல்களையும் சஞ்சிகைகளையும் பெறுவதில் எமது மாணவருக்குள்ள இடர்ப்பாடுகளைக் கருத்திற்கொண்டே இந்நூல்களைத் தயாரிப் பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை ஈண்டு விசேடமாகக் குறிப்பிடவேண்டும்.

குறித்த பாடங்கள் சிலவற்றைப் பொறுத்தமட்டில் விரிவான பாடத்திட்டங்களும் பொருத்தமான நூற்பட்டியல்களும் பாட சாலைகளுக்கு ஏலவே அனுப்பப்பட்டுள்ளன. பாடசாலை நூல் நிலை யங்களை விருத்திசெய்வதற்காக, இந்நிலைக் கல்விக்குத் தேவை யான நூல்கள் இவ்வாண்டிலும் கடந்த ஆண்டிலும் மேற்படி நூல்நிலையங்கட்கு அளிக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஆசிரியருக் குச் சேவைக்காலப் பயிற்சி ஒன்றும் நடைமுறையிற் செயற்படுத் தப்பட்டுள்ளது.

இந்நூல்கள் பற்றிய தங்கள் ஆலோசனைகளும், விமரிசனங்களும் உவந்து ஏற்றுக்கொள்ளப்படும். வெளியிடுதற்கு இறுதிப் பிரதி தயாரிக்கப்படும்போது தங்கள் ஆலோசனைகட்கு விசேட கவனம் செலுத்தப்படும். தங்கள் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கல்வி வெளியீட்டு ஆணையாளருக்கு அனுப்புவீர்களாயின் நாம் நன்றி யுடையோம்.

# பொருளடக்கம்


பக்கம்

## உளவியற் பரப்புப் பற்றிய விளக்கம்

1.1 உளவியலெனப்படுவது யாது?........................ 1

1.2 தற்கால உளவியலில் விஞ்ஞான முறைகள் பயன்படும் விதம்................................................ 5

1.3 தற்கால உளவியலின் ஆரம்பமும் அதனைச் சார்ந்த மரபுகளும்..........................................11

# உளவியற் பரப்புப் பற்றிய விளக்கம்

## 1.1 உளவியல் எனப்படுவது யாது?

உளவியல் பற்றிப் பல குறுகிய கருத்துகள் நிலவுகின்றன. பிறிதொருவர் உள்ளத்தில் உள்ளவற்றைப் புரிந்து கொள்ளும் வல்லமையைப் பயின்று கொள்வதற்குப் பயன்படும் துறையே உளவியல் என்பர் சிலர். வேறுசிலர், மயக்குதல் போன்ற முறைகள் மூலம் வித்தைகள் காட்டக் கற்றுக் கொள்வதற்குரிய துறையே உளவியலென்பர். இன்னும் சிலர், ஒருவருடைய வருங்கால நடத்தை பற்றிய விபரங்களை, உளவியல் அறிவைக் கொண்டு விளங்கிக் கொள்ளலாம் என்பர். இக் கருத்தைக் கொண்டுளோர், உளவியல், கைபார்த்து எதிர்காலம் கூறும் இரேகை சாத்திரம் போன்ற ஒன்றுக்குச் சமமானது என்பர். இவையெல்லாம் உளவியல் பற்றி நிலவும் குறுகிய கருத்துக்களாயின், உளவியல் எனப்படுவது யாது? உளவியல் என்ற பதத்தின் பொருள் 'உளம்' பற்றிய துறை என்பதாகும். (உளவியலைக் குறிக்கும் *Psychology* எனும் ஆங்கிலச் சொல் ஆன்மா என்ற பொருளையுடைய *Psyche* எனும் கிரேக்கச் சொல்லின் அடியாகப் பிறந்துளது). எனவே, உளம் எனப்படுவது யாது? எனும் பிரச்சினை இங்கே எழுகின்றது. இப்பிரச்சினை மிகப் பழைய காலத்திலிருந்தே, பெரும்பாலும் மெய்யியலறிஞர் மத்தியில், விவாதிக்கப்பட்டு வருகின்றது. இன்றுவரை இப்பிரச்சினைக்கு ஏகமனதான தீர்வு எதுவும் காணப்பட்டிலது.

இப்படியான கருத்து வேறுபாடுகளுக்கு மூலகாரணமாகவுள்ள 'விடயம்' பற்றி அறிவியல் அடிப்படையில் ஆராய்தல் சுலபமன்று. எனினும், நடத்தைவாத உளவியலறிஞர் எனப்படுவோர் இதனை உளவியல் அடிப்படையில் ஆராய முற்பட்டனர். நடத்தைவாத உளவியலறிஞர் கருத்தின்படி, உளவியலறிஞன் நடத்தை பற்றியே ஆராய்தல் வேண்டும். இங்கு நடத்தை என்பதில் மனிதர்களுடைய நடத்தையும் விலங்குகளது நடத்தையும் அடங்கும். சூடான ஒரு பொருள் எங்களுடைய கையிற் பட்டுவிட்டால் அல்லது கைக்கு அண்மையிலே இருக்கிறதாக நாம் உணர்ந்துவிட்டால் உடனே கையை அப்பால் எடுத்துவிடுவோம். இவ்வாறே, வீதியிற் செல்லும் போது எதிர்பாராத விதமாக ஒரு வாகனத்தின் 'ஹோன்' சத்தம் எமக்கருகில் கேட்டுவிட்டால், நாம் திடீரென வீதியின் ஒரு

பக்கம் பாய்ந்து விடுவோம். இவை மிகவும் சர்வசாதாரண நடத்தைகள். எமது நடத்தைகளுள் சில மிகவும் சிக்கலானவை. ஒரு பிரச்சினைக்குத் தீர்வுகாண நாம் முயலுவது சிக்கலான நடத்தைகளுக்குரிய ஓர் உதாரணம். நடத்தைவாத உளவியலறிஞர் கருத்தின்படி, சிந்தித்தல், தெளிதல் ஆகியனவும் நடத்தைகளாகக் கொள்ளற்பாலன. இவற்றுக்கோர் சிறப்புண்டு. இவற்றுக்கு அறிவியல் அடிப்படையில் விளக்கங் காணலாம் என்பதே அது. பதிவிறுத்தல் (மனதில் நிறுத்தி வைத்தல்) போன்ற ஒரு செயலுக்கு அறிவியல் முறையில் எவ்வாறு விளக்கங் காணலாம் என்று இந்த இடத்திலே ஒருவர் வினவக்கூடும். ஆனல் ஒரு நடத்தையைத் தொடர்ந்து பின்பற்றுவது அதனை மனதில் நிறுத்தி வைத்தலாகுமென்பதை விளங்கிக் கொண்டால், பதிவிறுத்தலுக்கும் அறிவியல் முறையில் விளக்கம் காணலாமென்பது தெளிவாகும். ஒரு மாணவனிடம் பல சொற்களைப் படிக்கும்படி கொடுத்துவிட்டு அவை அவனுடைய பதிவிறுத்தல் திறனில் படிந்திருக்கின்றனவா என்பதை அறிந்து கொள்வதற்கு அச்சொற்களை நினைவிலிருந்து சொல்லும்படி அல்லது எழுதும்படி அம்மாணவனைக் கேட்கலாம். இன்னும், அவனுக்குக் கொடுக்கப்பட்ட சொற்களுள் எவ்வளவை ஞாபகத்திலிருந்து சொல்லவோ, எழுதவோ அவனல் முடியும் என்பதையும் தீர்மானிக்கலாம். இதனல் பதிவிறுத்தல் திறனையும் உளவியலறிஞர் அளவிடக் கூடியதாக இருக்கின்றது. சிந்தித்தல், தெளிதல், கற்றல் போன்ற வெளிப்படை நடத்தைகளைக் கவனித்து ஆராய்வதற்கு உளவியலறிஞர் முயன்றுள்ளனர். இப்படியாக உளவியலை நடத்தை பற்றிய ஓர் ஆராய்ச்சியாகக் கொண்டதனல் பெரும் நன்மை ஒன்று ஏற்பட்டுள்ளது. அதாவது குழந்தைகளின் நடத்தையும் விலங்குகளின் நடத்தையும் உளவியலில் இடம்பெற்றுள்ளன. உளவியல ஒரு தனித்துறையாக உருவாவதற்கு முன்னர், குழந்தைகளின் நடத்தையிலும் விலங்குகளின் நடத்தையிலும் உளவியலறிஞர்கள் அக்கறை கொண்டிருக்கவில்லை. வளர்ந்தவர்களுடைய உளநிலையை மாத்திரம் ஆராய்வதுடன் உளவியல் நின்றதே அதற்குக் காரணம்.

நடத்தைவாத உளவியல் தோன்றியதன் பின்னர் உளவியலின் அறிவியற் பண்பு அபிவிருத்தியடைந்தமையினல், சில பகுதிகளுக்குரிய விடயம் இப்படியாக விரிவடைந்தது எனினும் உளக் காரணங்கள் என்ற முறையில் முக்கியத்துவமுடைய நோ முதலிய அனுபவங்கள் உளவியலறிஞருடைய கவனத்திலிருந்து விடுபட்டன. இது நடத்தைவாத உளவியலுக்கு மாருகக் கூறப்படும் ஒரு கண்டனமாகும். ஒருவனுக்குத் தலையிடி, பசி, கோபம் அல்லது மகிழ்ச்சி போன்ற ஒன்று உண்டானபோது, அவனிடத்தில் நாம் காணக்கூடும் நடத்தைகளைவிட அவனுக்குள்ளே பல புலனுணர்வுகளும் ஏற்படுகின்றன. நடத்தையை மாத்திரம் ஆராயும்போது இப்படியான அனுபவங்கள் புறக்கணிக்கப்பட்டு விடுகின்றன என நடத்தைவாத

உளவியலைக் கண்டனஞ் செய்வோர் கூறுகின்றனர். அனுபவங்கள் பற்றி ஆராய்வதன் முக்கியத்துவத்தினை அண்மைக் காலங்களிலே உளவியலறிஞர் நன்கு விளங்கியுள்ளனர். எந்திரவியல் உளவியலறிஞர் கூறியுள்ளதின்படி ஆகாயவிமானச் சாரதிகள், அதிக உயரத்திற் பறக்கும்போது பல்வேறு மனக்காட்சிகளைக் காண்கின்றனர். சில வேளைகளிலே இப்படியான காட்சிகளால் அவர்கள் ஏமாற்றப்படுகின்றனர். மேலும், வேகமாக விமானத்தைச் செலுத்தும் வேளைகளிலும், இப்படியான அனுபவங்கள் அவர்களுக்கு ஏற்படுவதாக அறியப்பட்டுள்ளது. நாளாந்த வாழ்க்கையில் நாம் பற்பல அனுபவங்களைப் பெறுகின்றோம். உட்கார்ந்திருக்கும் போது தூக்கம் வந்துவிட்டால் தூக்கி எறியப்படுவது போலத் தோன்றுவது இது போன்ற ஓர் அனுபவமாகும். முன் சென்றிராத ஓர் இடத்தைக் கண்டு அது தமக்குப் பழக்கமான ஓர் இடமென ஒருவர் உணருவதும் இதுபோன்ற மற்றுமொரு அனுபவமாகும். இப்படியான அனுபவங்கள் பற்றி ஆராய்தல் வேண்டுமெனவும், நடத்தையின் வெளித் தோற்றத்தை மாத்திரம் அவதானித்து அதனை ஆராய முடியாதெனவும் உளவியலறிஞர் எடுத்துக் காட்டியுள்ளனர்.

நடத்தைவாத உளவியலுக்கு இலக்கான நடத்தையைக் கூர்ந்து ஆராய்ந்ததன் மற்றுமொரு விளைவாகத் தருக்கஞ்செய்தல், பிரச்சினைதீர்த்தல் முதலியன சம்பந்தமாக மனிதனிடத்திலே காணப்படும் விசேட வல்லமைகள் புறக்கணிக்கப்பட்டுவிட்டன. இதனை நடத்தைவாத உளவியலின் ஒரு குறைபாடெனக் கண்ட சில் உளவியலறிஞர் இந்த வல்லமைகள் பற்றி விசேட கவனஞ் செலுத்துவதற்கு முற்பட்டுள்ளனர். உளவியலின் இந்தப் புதிய திருப்பத்தை 1960 களின் பின்னர் மிகவும் தெளிவாகக் காணலாம். பேராசிரியர் சீ. ஓ. ஹெப் 1960 இல் அமெரிக்க உளவியற் சங்கத்திலே ஆற்றிய ஒரு சொற்பொழிவின்போது தற்கால உளவியல் வளர்ச்சிக் கட்டங்களை இரண்டாகப் பிரித்து விளக்கினார். அவற்றுள் முதலாவது கட்டத்திலே முக்கிய இடத்தைப் பெறும் நடத்தை உளவியல், கற்றல் பற்றி ஆராய்வதிலே கவனஞ் செலுத்தியது. ஆயின், இரண்டாவது கட்டத்திலே கற்றலுக்குரிய இடத்தைச் 'சிந்தனை' பெறுவதாக அவர் எடுத்துக் காட்டினார். வெளிப்பார்வைக்குத் தோன்றும் நடத்தையைக் கொண்டு சிந்தனையைப் புரிந்து கொள்ள முடியாது என்றமையினாலே நடத்தைவாதிகள் சிந்தனை பற்றி அதிக கவனஞ் செலுத்தாது விட்டனர். ஹெப் எடுத்துக் காட்டியுள்ளபடி, முதலிலே அதிக கவனத்தைப்பெறாத சிந்தனை, பிற்காலத்திலே அதிக கவனத்தைப் பெற்றதனால், நடத்தை உளவியலினால் புறக்கணிக்கப்பட்ட விடயங்கள், அண்மைக் காலத்திலிருந்து, உளவியலிலே சேர்க்கப்பட்டுள்ளனவென எமக்குத் தோன்றுகின்றது.

உளவியலிலே ஏற்பட்ட இப்படியான புதிய திருப்பங்களை எடுத்துக் கொண்டால், அதனை நடத்தையை மாத்திரம் பற்றிய ஓர் ஆராய்ச்சியெனக் கொள்ளாது நடத்தையையும் அனுபவத்தையும் பற்றிய ஓர் ஆராய்ச்சியென்று கொள்வது மிகப் பொருத்தமாகுமெனத் தோன்றுகின்றது.

## 1.2 தற்கால உளவியலில் விஞ்ஞான முறைகள் பயன்படும் விதம்

உளவியலானது நடத்தைபற்றியும் அனுபவம் பற்றியும் ஆராய்கின்ற ஒரு துறையென்றமையினுல் அது 'நடத்தைவாதம்' ( *Behaviourism* ) எனப்படுகின்றது. மனித இனம் பற்றி ஆராய்கின்ற துறையாகிய மனிதவியலும், மனித சமூக வாழ்க்கை, மனிதனுல் உருவாக்கப்பட்டுள்ள சமூக நிறுவனங்கள் ஆகியன பற்றி ஆராய்கின்ற சமூகவியலும், நடத்தைவாதக் குடும்பத்தைச் சேர்ந்த முக்கியமான துறைகளாகும். உளவியற்றுறை, நடத்தைவாதக் குடும்பத்தைச் சேர்ந்ததெனினும் பௌதிகம், உயிரியல் முதலிய துறைகளிலிருந்தும் நன்மையடைந்துள்ளது என்பதனை மறுக்கமுடியாது. உளவியலறிஞனுடைய ஆய்வுக் கூடத்திலே பயன்படுத்தப்படும் உபகரணங்களுள் பெரும்பாலானவை பௌதிகவியல், எந்திரவியல் ஆய்வுக் கூடங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டனவேயாகும். நரம்புத் தொகுதியையும் மூளையையும் பயன்படுத்தி எமது நடத்தை பற்றி எவ்வளவு தூரம் அறிந்து கொள்ளலாம் என்ற கேள்வி பற்றி உளவியலறிஞரும் விசேட கவனஞ் செலுத்தியுள்ளனரென்றமையினுல், உடற்ருெழிலியலுடனும் உளவியல் நெருங்கிய தொடர்புடையதாகும். மூளையின் ஏதேனும் ஒரு பகுதி பாதிக்கப்படின் அதனுல் நடத்தையும் அனுபவமும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பது பற்றி எவ்வளவோ ஆராய்ச்சிகள் செய்யப்பட்டுள்ளன.

விஞ்ஞான அடிப்படையிலான ஒரு விதியை உருவாக்கும் பொருட்டு விடயம் ஆராயும்போதும், விஞ்ஞான அடிப்படையிலான ஒரு முறையினையே ஆராய்ச்சியாளர் பின்பற்றுகின்றனர். நடத்தை, அனுபவம் ஆகியன பற்றி ஆராயும்போது உளவியலறிஞன் பயன்படுத்தும் முறைகளும் விஞ்ஞான முறைகளுள் சேர்த்துக் கொள்ளப்படக் கூடியனவாகும். உளவியலினை ஒரு விஞ்ஞானம் என்று கொள்ளுவோரும் அங்கே விஞ்ஞான அடிப்படையிலான முறைகளைக் கையாளுகின்றுர்கள் என்பதே காரணமாகும். ஏனைய நடத்தைவாதிகளைவிட உளவியலறிஞர் மிகவும் செப்பமான விஞ்ஞான ஆராய்ச்சியின் அடிப்படையிலான பரிசோதனை முறைகளைப் பெரும்பாலும் கையாளும் வாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள் என்பது அவர்களுக்குக் கிடைத்துள்ள ஒரு நற்பேருகும்.

பரிசோதனை முறை என்பது, ஒரு பொருளைப் பாதிக்கும் காரணிகளைக் கட்டுப்படுத்தி, அவை ஒவ்வொன்றும் எவ்வாறு, எவ்வளவு தூரம் அப்பொருளைப் பாதித்துள்ளன என்று தீர்மானிக்கும் ஒரு முறையாகும். எடுத்துக்காட்டாக, டபிள்யு. செமன்ட் (1960) கனவுகள் பற்றிச் செய்த பரிசோதனையைப் பார்ப்போம். கனவு காண்பதன் மூலம் ஏதேனும் ஒரு தேவை பூர்த்தி செய்யப்படுகின்றதா என்பதை அறியும் நோக்குடனேயே செமன்ட் இப் பரிசோதனையை நடத்தினர். இப்பரிசோதனையின் பொருட்டுச் சிலரைத் தெரிந்தெடுத்து இரு குழுக்களாகப் பிரித்தார். இவர்களுள் ஒரு குழுவினர் நித்திரையில் கனவு காணும் போதெல்லாம் குழப்பப்பட்டார்கள். (ஒருவர் கனவு காண்கின்றார் என்பதை அவருடைய கண்களை அவதானித்து அறிந்து கொள்ளலாம்). இப் படியாக அக்குழுவினர் கனவு காணாது தடுத்து வைக்கப்பட்டனர். ஆனால் மற்றக் குழுவினர் கனவுகள் காணும்போது எவ்விதமாகவும் குழப்பப்படவில்லை. அதன் பின்னர் இரு குழுவினரும் குறுக்கீடின்றிக் கனவு காண்பதற்கு விடப்பட்டனர். இப்பரிசோதனையின் மூலம், கனவின் ஆரம்பத்திலே குழப்பப்பட்ட குழுவினர் மற்றக் குழுவினரைவிட அதிக கனவுகளைக் கண்டார்கள் எனச் செமன்ட் கண்டார். கனவின் ஆரம்பத்திலே அவர்கள் குழப்பப்பட்டமையினுல் கனவுக்குரிய தேவை பூர்த்தி செய்யப்படாத காரணத்தினுல் அவர்கள் மீண்டும் மீண்டும் கனவுகள் கண்டனர் என்று செமன்ட் முடிவு செய்தார்.

ஒரு கனவைக் காண்பதற்கும் ஒரு தேவையைப் பூர்த்தி செய்வதற்குமுள்ள தொடர்பினை ஆராயும்போது, பரிசோதனையாளர் கனவு காண்பதனைக் கட்டுப்படுத்தியுள்ளார் என்பது எமக்கு விளங்குகின்றது. ஒரு குழுவினரைக் குறுக்கீடின்றிக் கனவு காண்பதற்கு விட்டு, மற்றக் கூட்டத்தினரைக் கனவு காணும்போதெல்லாம் குழப்பியதன் மூலம் கட்டுப்பாடு கையாளப்பட்டது. இப்படியாகப் பல காரணிகளைக் கட்டுப்படுத்துவது அவற்றின் செல்வாக்கை மாற்றுவதாகவும் கூறப்படலாம். கனவு காண்பதைக் கட்டுப்படுத்தியதனுல் அவற்றின் செல்வாக்கின் அளவு மாற்றப்பட்டுள்ளது. இப் படியாகச் செல்வாக்கை மாற்றலாம் என்பதுடன், கட்டுப்படுத்தப்படும் காரணி மாறி (*Variable*) எனப்படும். எனவே, மாறிகளுக்கிடையிலுள்ள தொடர்பைக் கண்டுபிடிப்பதே பரிசோதனை செய்வோனின் நோக்கம் எனலாம். கற்றலில் உள்ள ஆர்வத்துக்கும் கற்றலுக்குமுள்ள தொடர்பு எப்படியானது என்று தீர்மானஞ் செய்வதிலே அவன் ஈடுபாடு கொள்ளுகின்றுன். ஒவ்வொரு நிலையிலும் கற்றலில் செல்வாக்குச் செலுத்துகின்ற ஏனைய காரணிகளையும் பரிசோதனையாளன் கட்டுப்படுத்தல் வேண்டும். காரணிகள், இரண்டு முக்கியமான வகைகளாகப் பிரிக்கப்படும். அவையாவன (1) சாரா மாறிகள் ( *Independent Variable* ) (2) சாரும் மாறிகள் ( *Dependent*

*variable*) எனப்படும். மேலே காட்டப்பட்டுள்ள உதாரணத்திலே கற்பதிலுள்ள ஆர்வம் சாராமாறியாகும்: கற்கும் அளவு சாரும் மாறியாகும். சாராமாறியில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கேற்ப மாறுகின்ற காரணியே சாரும் மாறி எனப்படும்.


சாராமாறியை மாற்றிப் பரிசோதனை செய்யும் முறையை நன்கு தெளிவாக விளங்கிக்கொள்ளும் பொருட்டு, ஈ. சி. செறி (1953) எனும் உளவியலறிஞர் நடாத்திய ஒரு பரிசோதனையை நாம் பார்ப்போம். கவனத்தின் எல்லை பற்றிய பிரச்சினை சம்பந்தமாகவே அவர் இப்பரிசோதனையைச் செய்தார். வானொலியில் ஒலிபரப்பப்படும் ஒரு நாடகத்தைக் கவனித்துக்கொண்டு ஒரு நூலை வாசிக்க முடியுமா? இது கவனத்தின் எல்லை பற்றிய பிரச்சினைக்கு எடுத்துக்காட்டாகக்கூடிய ஒரு சாதாரணமான உதாரணமாகும். பரிசோதனை செய்வதற்குச் செறி கையாண்ட முறை பின்வருமாறு: பரிசோதனையில் பங்குபற்றியவர்கள் ஒவ்வொருவருடைய இரு காதுகளுக்கும் வேறுபட்ட இரு உரைப் பகுதிகள் ஒரே நேரத்தில் கேட்கத்தக்கதாக ஒழுங்கு செய்தார். அப்போது ஒரு காதுக்குக் கேட்கும் உரைப் பகுதி உரத்த குரலில் கேட்கத்தக்கதாகச் செய்யப்பட்டது. அதே வேளையில் மற்றக் காதுக்குக் கேட்கும் உரைப்பகுதி பல்வேறு விதமாக மாற்றப்பட்டது. அதாவது, ஆங்கில மொழியிலிருந்து ஜேமன் மொழிக்கும், ஆண் குரலிலிருந்து பெண் குரலுக்கும் மாற்றப்பட்டது. பின்னர், அம்மாற்றங்கள் பற்றிப் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டவர்கள் எவ்வளவு கவனஞ் செலுத்தியிருந்தார்கள் என்று ஆராயப்பட்டது. அப்போது, குரல் மாற்றம் செய்யப்பட்டது பற்றி அவர்கள் அறிந்திருந்தனரெனினும் உரைப்பகுதியின் மொழி மாற்றஞ் செய்யப்பட்டதில் அவர்கள் கவனஞ் செலுத்தவில்லையென்றும் செறி கண்டார். இப்பரிசோதனையின்போது கவனம், சாரும் மாறியானதென்றும் உரைப்பகுதி சாராமாறியானதென்றும் நாம் விளங்கிக் கொள்ளலாம். சாராமாறியின் மாற்றம் சாரும் மாறியில் எப்படியான மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என்பதை அறியவே செறி இப்பரிசோதனையைச் செய்தார்.

இப்படியாக ஒருமாறியில் ஏற்படும் மாற்றத்துக்கேற்ப மற்ற மாறியில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுவதற்கு உளவியலறிஞர் நுண்ணிய அளவீட்டு முறைகளைக் கையாளுதல் வேண்டும். எனவே, புள்ளிவிவரவியல், தற்கால உளவியலிலே மிகவும் முக்கியமான ஓர் இடத்தைப் பெறுகின்றது. இதைவிட நுண்ணிய மாற்றங்களை அளப்பதற்குரிய உபகரணங்களும் வேண்டும். சில வேளைகளிலே ஒரு நொடியின் நூற்றிலொரு பங்களவு மிகவுஞ் சிறிய காலத்துக்குள் ஏற்படும் மாற்றங்களை அளக்கவேண்டிய அவசியம் உளவியலறிஞருக்கு ஏற்படும். இதனால், உளவியலறிஞனுடைய ஆய்வுக் கூடம் வேகமான கணணிகள், இலத்திரன் காலஅளவீட்டு உபகரணங்கள் முதலிய மிகவும் நுண்மையான உபகரணங்களைக் கொண்டதாக

இருக்கவேண்டும். எமது நடத்தையில் காற்று, சத்தம் முதலியன வும் செல்வாக்குடையனவாக இருப்பதனுல், அப்படியான காரணி களையும் கட்டுப்படுத்தக் கூடிய முறையில் அந்த ஆய்வுக்கூடம் அமைந்திருத்தல் வேண்டும்.

மனிதரைப் பரிசோதனைப் பொருள்களாகப் பயன்படுத்தி மிக வும் நுண்ணிய பரிசோதனைகளைச் செய்யும்போது, பல்வேறு பிரச் சினைகள் ஏற்படக்கூடும். எடுத்துக்காட்டாக, சில பரிசோதனைகளிலே மூளையின் ஒரு பகுதியை அகற்றவேண்டிய அவசியமுமே ஏற்படக் கூடும். ஆனுல், பரிசோதனைக்காகவே அப்படியான ஒன்றை உள வியலறிஞுனுற் செய்யமுடியாது. எனவே, பரிசோதனையின் பொருட்டு, உளவியலறிஞர் பெரும்பாலும் எலிகள், குரங்குகள் போன்ற மிருகங்களைப் பயன்படுத்துகின்றனர். மனித நடத்தை பற்றி நடத்தப்படும் ஆராய்ச்சிகளிலே சிலவேளைகளில் இயல்பான அவதானம் (Natural Observation) போன்ற ஆராய்ச்சி முறைகளை மாத்திரம் அவன் கையாளவேண்டி ஏற்படுகின்றது. இயல்பான அவதானத்திலே ஒரு விடயம் நடக்கும் முறையைப் பார்த்து முடி வுகள் செய்யப்படுகின்றன. இது விஞ்ஞான ஆராய்ச்சியின் ஆரம்ப நிலை என்று கூறலாம். வளருகின்ற ஒரு குழந்தையினுடைய நடத் தைகள் மாறும் முறை பற்றி நுண்ணிய ஆராய்ச்சி செய்வதற்கு முன்னர் அந்த மாற்றங்கள் பற்றிச் செய்யப்படும் அவதானங்கள் தற்காலிகமான சிற்சில முடிவுகளைச் செய்து கொள்வதற்கு உதவக் கூடும். இப்படியாக இயல்பான அவதானத்தை மாத்திரம் அடிப் படையாகக் கொண்டு செய்யப்படும் முடிவுகள் பின்னர் நுண்ணிய முறையில் விபரங்களைத் தேடிச் செய்யப்படும் ஆராய்ச்சி மூலம் நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு. பெண்கள் ஆண்களைவிட நுண் மதி குறைந்தவர்கள் என்று இருந்துவந்த கருத்து அண்மையிலே நடத்தப்பட்ட பரிசோதனைகள் மூலம் நிராகரிக்கப்பட்டுள்ளமை இதற்குரிய ஒரு சிறந்த உதாரணமாகும். இயல்பான அவதான முறை எவ்வித பயனுமில்லாத ஒரு முறையென்பது இதன் கருத் தன்று. ஆளுமையை அளவிடும்போது அல்லது ஒரு மனிதன் எந்த வர்க்கத்துக்கு உரியவன் என்று தீர்மானிப்பதற்கு இயல்பான அவ தான முறையை அடிப்படையாகக் கொண்ட முறைகளை உளவியலறி ஞர் கையாளுகின்றனர். வீதிகளிலே அல்லது பஸ் வண்டிகளிலே நாம் சந்திப்பவர்களைக் குள்ளர் அல்லது நல்லவர் என்றவாறு முடிவு செய்கின்றேம். ஒரு மனிதனுடைய நடத்தையையும் உடல் தோற் றத்தையும் அவதானித்தே நாம் இப்படியான முடிவுகளைச் செய்து கொள்கின்றேம். ஆனுல், இப்படியான முடிவுகள் பெரும்பாலும் பிழையாவதை எமது அனுபவத்தில் நாம் கண்டுள்ளோம். ஒரு மனிதனைச் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியாது என்று பொது வாகக் கூறப்படுகின்ற கருத்துக்குரிய காரணம் இதுவேயாகும். ஆனுல், உளவியலறிஞர், அவதானத்தின்போது ஏற்படக்கூடும்

தவறுகளை முடியுமானவரை தவிர்க்கத்தக்கதாக ஆளுமையை அளவிடும் முறைகளை அபிவிருத்தி செய்துள்ளனர். தரமிடு அளவுகோல்முறை (*Rating Scale*) இப்படியான ஆளுமை அளவீட்டு முறைக்குரிய ஓர் உதாரணமாகும். ஒருமனிதனுடைய நடத்தையை மிகவும் கவனமாக அவதானித்து ஒவ்வொரு நடத்தை இயல்பு சம்பந்தமாகவும் அவனுக்குரிய இடம் யாது என்பதைத் தீர்மானிப்பதற்கே அளவுகோல் முறை கையாளப்படுகின்றது. குறிக்கோளுடன் சீராக வேலைசெய்தல் எனும் நடத்தை இயல்பு சம்பந்தமாக ஒரு மனிதனுக்குரிய நிலை யாது என்று தீர்மானஞ் செய்ய வேண்டுமாயின், கீழ்க்காணும் முறையான அளவுத் திட்டத்தைப் பயன்படுத்தலாம்.




அவதானிக்கப்படும் மனிதனை இந்த அளவுத்திட்டத்தில் எவ்விடத்திலே வைக்கலாமென்று தீர்மானிப்பதற்கு நடத்தையை மிகவும் கவனமாக உளவியலறிஞன் அவதானித்தல் வேண்டும். அவதானிக்கப்படும் மனிதன் பற்றி உளவியலறிஞனிடத்திலே ஒரு விருப்பம் இருப்பின் அவன் திட்டவட்டமான குறிக்கோளுடன் வேலை செய்கின்றவன் என்ற தீர்மானத்துக்கு அவனை அறியாமலே அவன் வரக்கூடும். எனவே, இப்படியான தவறு ஏற்படுவதை முடியுமான அளவு தவிர்ப்பதற்கு உளவியலறிஞர் முயலுகின்றனர். கவனமாகப் பயன்படுத்தப்படின், அவதானமுறையும் பயனுள்ள ஆராய்ச்சி முறையாகுமென்பது இதிலிருந்து எமக்குத் தெளிவாகின்றது.

நிகழ்காலத்திலே ஒருவனிடத்திலே காணப்படும் நடத்தையை மாத்திரம் அவதானித்து, அவனுடைய பொதுவான நடத்தை பற்றிச் சரியான முடிவுகளுக்கு வரமுடியாது. எனவே ஒவ்வொரு மனிதனதும் குடும்பத்தவர் பற்றிய விபரங்களிலும், அதாவது, கடந்த காலத்தில் அவர்களைப் பீடித்திருந்த நோய்கள், அவர்களுக்கு அச்சம் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள், அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் போன்றன பற்றிய விபரங்களிலும் உளவியலறிஞர் கவனஞ் செலுத்தவேண்டும். இப்படியான விபரங்களைக் கொண்ட அறிக்கை தனியாள் வரலாறு (*Case History*) எனப்படும். உளநோயாளி

ஒருவரை உளநோய் வைத்தியசாலை ஒன்றிலே சேர்க்கும்போது தனியாள் வரலாறு பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இதற்குத் தேவையான விபரங்கள் நோயாளியினுல் அல்லது அவருடைய இனத்தவர், நண்பர் ஆகியோரால் கொடுக்கப்படுகின்றன.

தனியாள் வரலாற்று முறையையும் இயல்பான அவதான முறையையும் கொண்டு ஒருவனைப் பற்றிய எல்லா விபரங்களையும் பெற்றுவிட முடியாது. உதாரணமாக, மேற்கூறப்பட்டுள்ள இரண்டு முறைகளையும் கொண்டு ஒருமனிதனுடைய வல்லமைகள் பற்றிச் சரியான விபரங்களைப் பெற்றுக் கொள்ளமுடியாது. இதனுல், வல்லமைகள் போன்ற விடயங்கள் பற்றிய விபரங்களைச் சேகரிப்பதற்கு உளவியலறிஞர் சோதனை முறையை (Test Method) கையாளுகின்றனர். நுண்மதிச் சோதனை அப்படியான சோதனை முறைக்குரிய ஓர் உதாரணமாகும். இதைவிட ஒரு மனிதனுடைய மனப்பாங்கு, விருப்பு, வெறுப்பு முதலியவற்றை அளவிடுவதற்குரியதாகவும் சோதனை முறை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. ஒரு மனிதனிடத்திலிருந்து வாய் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் விபரங்களை விடச் சோதனை முறை மூலம் பெற்றுக் கொள்ளப்படும் விபரங்கள் பெரிதும் நம்பகரமானவை என்றதினுல் சோதனைமுறை தற்கால விஞ்ஞான அடிப்படையிலான ஆராய்ச்சிகளிலே பெரும்பாலும் கையாளப்படுகின்றது.

உளவியலறிஞன், நடத்தையையும் அனுபவத்தையும் பற்றி ஆராயும்போது, அறிவியல் அடிப்படையிலான முறையை எவ்வாறு கையாளுகின்முன் என்பது இப்போது எமக்கு விளங்குகின்றது. சாதாரணமான ஒருவன் குறிக்கப்பட்ட ஓர் அவதானத்தைக் கொண்டே முடிவுக்கு வருகின்முனுயினும் உளவியலறிஞன், பரிசோதனை முறையையும் சீரிய அவதான முறையையும் கையாண்டே தனது முடிவுக்கு வருகின்முன். சாதாரண மனிதனுடைய முடிவுகளிலே அவனுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் போன்ற விடயங்களும் அடங்கக் கூடுமெனினும், உளவியலறிஞன் தனது முடிவுகளிலே பாரபட்சமான போக்கைத் தவிர்த்துக்கொள்ளுவதற்குப் போதிய அளவு முயல்கின்முன். எடுத்துக்காட்டாக, ஆங்கில இனத்தைச் சேர்ந்த உளவியலறிஞன் ஒருவன், தனிப்பட்ட முறையிலே, கறுத்த இனத்தவரை விரும்பமாட்டானுயினும், அவர்கள் பற்றி நடத்தும் ஆராய்ச்சியிலே தமது தனிப்பட்ட வெறுப்பினுல் பரிசோதனை பாதிக்கப்படாதிருக்க வேண்டுமென முயலுவான். மேலும், உளவியலறிஞன் ஒருவன் தனது பரிசோதனைக்கோ அவதானத்துக்கோ தேவையான விபரங்களைச் சோதனை முறைபோன்ற அறிவியல் அடிப்படையிலான தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தியே பெற்றுக் கொள்ளுகின்முன் என்றும் நாம் அறிவோம்.

## 1.3 தற்கால உளவியலின் ஆரம்பமும் அதனைச் சார்ந்த மரபுகளும்

உளவியலானது, ஒரு தனித்துறையாக அபிவிருத்தியடைவதற்கு ஆரம்பமாகி ஏறக்குறைய ஒரு நூற்றுண்டு காலமே இதுவரை கழிந்துள்ளது. எனவே பௌதிகவியல், உயிரியல் போன்ற துறைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது உளவியல், இன்னும் முதிர்ச்சியடையாத ஒரு துறையாகவே இருக்கின்றது என்று கூறுவதிலே தவறில்லை. ஒரு தனிப்பட்ட துறையாக உருவாவதற்கு முன்னர் உளவியல், மெய்யியலின் ஒரு பகுதியாகவே இருந்து வந்துள்ளது. ஏறக்குறைய எல்லா இந்திய மெய்யியல் முறைகளிலும், உளவியல் முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றுள்ளது. குறிப்பாக, பௌத்த மெய்யியலிலே, தற்கால உளவியற் கருத்துக்களைப் பெரிதும் ஒத்துள இயல்புகளைக் கொண்டுள்ள, அபிவிருத்தியடைந்த உளவியல் முறை ஒன்றினைக் காணக்கூடியதாக இருக்கின்றது. பிளேட்டோ, அரிஸ்டோடில் போன்ற கிரேக்க மெய்யியலறிஞருடைய காலத்திலிருந்தே மேல்நாட்டு மெய்யியல் முறையிலும் உளவியற் பிரச்சினைகள் பரிசீலனை செய்யப்பட்டு வந்துள்ளன. ஜோன் லொக் (1632–1704), ஜோஜ் பாக்ளி (1685–1753), டேவிட் ஹியும் (1711–1776) போன்ற ஆங்கில மெய்யியலறிஞர் உளவியலை அடிப்படையாகக் கொண்டே தமது மெய்யியற் கொள்கைகளை விளக்கினர்கள். 19 ஆம் நூற்றுண்டிலே பரிசோதனையுளவியல் (*Experimental Psychology*) தோன்றியபோது உளம் பற்றி இரண்டு முக்கியமான கொள்கைகள் உளவியலறிஞரிடையே காணப்பட்டன.

(அ) ஆற்றலுளவியல் (*Faculty Psychology*) (ஆ) இயைபு உளவியல் (*Associative Psychology*) என்ற இரண்டுமே அவை. ஆற்றலுளவியலின்படி நினைவில் நிறுத்தல், துணிதல் முதலிய செயல்கள் சிந்திக்கும் ஆற்றல்களாகும். உளச் செயல்கள் இந்தச் சிந்திக்கும் ஆற்றல் காரணமாகவே நிகழுகின்றனவென்றும் இக் கொள்கை கூறுகின்றது. ஆனல் சிந்திக்கும் ஆற்றல் மனிதனுக்கு இயற்கையாக உள்ளது எனும் கொள்கையை இயைபு உளவியல் நிராகரித்துள்ளது. இயைபு உளவியலறிஞர் எடுத்துக்காட்டியுள்ளதன்படி, புலன்கள் வாயிலாகக் கிடைக்கும் அகக்காட்சி மூலமே எண்ணக்கருக்கள் உண்டாகின்றன. ஒவ்வொரு உளச்செயலையும்

இந்த எண்ணக்கருக்களின் கூட்டுத்தொகையைக் கொண்டு விளங்கிக் கொள்ளலாம் என்பது இயைபு உளவியலறிஞர் கருத்து.

19 ஆம் நூற்றுண்டிலே உடற்றெழிலியற்றுறையிலும் துரிதமான ஓர் அபிவிருத்தி காணப்பட்டது. அந்நூற்றுண்டின் இறுதிக் காலப் பகுதியில் மூளே, நரம்புத்தொகுதி ஆகியவற்றின் செயற்பாடுகள் பற்றியும், கண், காது முதலிய புலன்கள் வாயிலாக வெளியுலகை விளங்கிக் கொள்வதுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் பற்றியும், உடற்றெழிலியல் முறையான பல உண்மைகள் கண்டு பிடிக்கப்பட்டன. அத்துடன், அச்செயற்பாடுகள் பற்றிய உண்மைகள் சம்பந்தமான ஆராய்ச்சிகளிலே பயன்படும் பல உபகரணங்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

இப்படியான உடற்றெழிலியல் ஆராய்ச்சிகளின் விளேவாக, விஞ்ஞான உபகரணங்களேப் பயன்படுத்தி உளவியல் பற்றிய உண்மைகளேக் கண்டுபிடிக்கலாம் எனும் கருத்து ஏற்பட்டது. இக்கருத்து வில்கில்ம் வூண்ட் (1832--1920) என்பவரால் முதன் முதலிற் செயற்படுத்தப்பட்டது. உளவியற் பரிசோதனேகளுக்கெனத் தாபிக்கப்பட்ட முதலாவது ஆய்வுக்கூடம் லிப்சிக் நகரில் 1879 இல் இவராலேயே தாபிக்கப்பட்டது. அதனுலே இவர் 'பரிசோதனே உளவியலின் தந்தை' எனக் குறிப்பிடப்படுகின்றுர். ஒரு மெய்யியற் பேராசிரியராகவே வூண்ட் இருந்தாரெனினும், உளவியல், மெய்யியலிலிருந்து பிரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தையுடையவராக இருந்தார். உளவியலறிஞனின் ஆராய்ச்சிக்குரிய விடயம் யாது? அவன் கைக்கொள்ள வேண்டிய முறை யாது? என்பன போன்ற பிரச்சினேகள் பற்றி வூண்ட் கூறிய கருத்துக்களே அடிப்படையாகக் கொண்டு டிச்சனர் (1867–1927) எனும் அவருடைய மாணவன் அமைப்புளவியல் எனும் மரபை உருவாக்கினுர். எனவே, வூண்டினுடைய கருத்துக்கள் பற்றி அமைப்புளவியல் பற்றிய பகுதியில் விரிவாக ஆராய்வோம்.

## அமைப்புளவியல்

வூண்ட், டிச்சனர் ஆகிய இருவரும் எடுத்துக்காட்டியுள்ளதன்படி, மனிதனுடைய நனவில் நிகழும் அனுபவங்களே உளவியலறிஞனுடைய ஆராய்ச்சிக்குரிய விடயங்களாகும். இங்கு அனுபவம் என்பது எமது புலனுணர்ச்சிகள், சிந்தனேகள், முதலியவற்றைக் குறிக்கும். பல்வலி உண்டானபோது எமக்கு ஒரு வேதனே ஏற்பட்டுள்ளதாக நாம் உணருகிறேம். அவ்வாறே நனவிலும் ஒரு நிகழ்ச்சி ஏற்படும் போது, அந்நிகழ்ச்சி பற்றிய உணர்வு எமக்கு ஏற்படுகின்றது. ஒரு நோ உண்டானபோதும், அது உண்டானமை பற்றி நாம் உணருகின்றேம்.

இப்படியான அனுபவங்கள் பற்றி உளவியலறிஞன் ஆராயும் போது, இரசாயனவியலறிஞன் பின்பற்றும் முறைகளே ஒத்த முறை

களையே அவனும் பின்பற்ற வேண்டும் என்பது வூண்டின் கருத்து. ஓர் இரசாயனப் பொருளை அதன் மூலக்கூறுகளாகப் பிரித்து விளக்குதல் இரசாயனவியலறிஞனுடைய கடமையாக அப்போது கருதப்பட்டது. அவ்வாறே உளவியலறிஞனும், சிக்கலான அனுபவங்களை அவற்றின் மூலக்கூறுகளாகப் பிரித்து அந்த அனுபவங்களின் அமைப்பினை (*Structure*) விளக்குதல் வேண்டும் என்று வூண்ட் கருதினர். எடுத்துக்காட்டாக, பழைய நண்பன் ஒருவனைக் காணும்போது நாம் பெறும் அனுபவம் சிக்கலானது. அந்த அனுபவம் பின்னேக்கு மூலமே எமக்குக் கிடைக்கின்றது. கண்கள் மூலம் கிடைக்கின்ற பின்னேக்கு என்றதினல் அது பார்வைப் பின்னேக்கு எனப்படும். இதனுடன் நினைவும் தொடர்புடையது. 'கண்டு பழக்கம்' எனும் எண்ணம் நினைவு மூலமே ஏற்படுகின்றது. வூண்ட் எடுத்துக்காட்டியுள்ளபடி, அனுபவத்தை அதன் மூலக் கூறுகளாகப் பிரிப்பதுடன் உளவியலறிஞனுடைய கடமை நின்று விடக்கூடாது. அந்த மூலக்கூறுகள் சேர்ந்துள்ள முறையை அல்லது சேர்க்கைப் பாங்கை அறிந்து அது பற்றிய விதிகளை விளக்குவதும் அவனுடைய கடமையாகும்.

ஓர் அனுபவத்தின் அமைப்பினை விளங்கிக் கொள்ளுவதற்கு அமைப்புளவியலறிஞர், உண்ணேக்கு முறையைக் கையாண்டனர். உண்ணேக்கு என்பது 'உள்ளே பார்த்தல்' என்ற பொருளுடையது. ஓர் அனுபவத்தினைப் பெறுகின்ற ஒரு மனிதன் தான் பெறுகின்ற அனுபவம் என்ன என்று சரியாகக் கூறுவதற்கு அவன் அந்த அனுபவத்தை நன்கு ஆராய்தல் வேண்டும் . எனவே 'உள்ளே பார்த்தல்' என்பது ஒருவன் தன்னுள்ளே உண்டாகும் அனுபவத்தை நன்ருகப் பரிசீலனை செய்தல் என்ற பொருள்படும். இது காரணமாக, நல்ல பயிற்சியுடைய அவதானி ஒருவனல் மாத்திரமே உண்ணேக்கு முறையைச் சரியான முறையிற் பயன்படுத்த முடியும், என்று டிச்சனர் எடுத்துக்காட்டியுள்ளார். மேலும், சில வேளைகளிலே ஒரு சொல் பல பொருள்களை உடையதாக இருக்கக்கூடும் என்பதனல், உண்ணேக்கு முறையைக் கையாளும் அவதானி தாம் அவதானிக்கும் விடயங்களைப் பற்றிக் கூறும்போது, கையாளும் சொற்கள் பற்றியும் கவனமாக இருத்தல் வேண்டும்.

எவ்வாருயினும், உண்ணேக்கு முறையின் குறைபாடுகள் பலவற்றினை அது தோன்றிய கால உளவியலறிஞரும், பிற்கால உளவியலறிஞரும் எடுத்துக்காட்டியுள்ளனர். உண்ணேக்கு முறைமூலம், ஓர் அனுபவத்தை அவதானிக்கும்போது அந்த அனுபவத்திலே மாற்றம் ஏற்படக் கூடும் என்பது இம்முறைக்கு மாருகக் கூறப்பட்ட கண்டனங்களுள் முக்கியமான ஒன்று. எடுத்துக்காட்டாக, எமக்குக் கோபம் உண்டாகி இருக்கும் போது, அக்கோபத்தை அவதானிப்பதற்கு நாம் முயன்ருல் அது அற்றுப் போய்விடும். உண்ணேக்கு முறைக்கு மாருக எழுந்துள்ள மற்றுமொரு கண்டனத்

தின்படி, இம்முறையைக் கொண்டு பெற்றுக் கொள்ளப்படும் விபரங்கள் ஒன்றுடன் ஒன்று முரண்பாடுடையனவாகும். இக்குறை பாடுகள் காரணமாக, உண்ணோக்கு முறை நம்பிக்கையான ஒன் றன்றென இவர்களால் நிராகரிக்கப்பட்டது. மேலும், உண்ணோக்கு முறையை ஓர் எல்லைக்குட்பட்ட பரப்புக்குள் மாத்திரமே பயன் படுத்தலாம் என்பது அதற்கு மாருகக் கூறப்படும் மற்றுமொரு கண்டனமாகும். விலங்குகள் பற்றியும், சிறுபிள்ளைகள் பற்றியும் உளவியல் முறையான ஆராய்ச்சிகளை நடத்தும்போது உண்ணோக்கு முறையினைக் கையாள முடியாது. அவ்வாறே உணர்விலா நிலை பற்றிய விபரங்களை அறிந்து கொள்வதற்கும் உண்ணோக்கு முறை யைக் கையாள் முடியாது.

இப்படிப்பட்ட கண்டனங்களுக்கு மத்தியிலே, உளவியற்றுறை யினுள்ளே அமைப்புளவியல் நெடுங்காலம் நிலைத்திருக்க முடிய வில்லை. ஆயினும், பரிசோதனை உளவியலின் மூலகர்த்தாக்கள் என்ற முறையிலே, அமைப்புளவாதிகள் உளவியலுக்கு அளப்பரிய சேவை செய்துள்ளனர். அமைப்புக்கொள்கை பிற்காலத்திலே நிரா கரிக்கப்பட்டதெனினும், உளவியலில் அறிவியல் அடிப்படையிலான முறைகள் கையாளப்படுதல் வேண்டும் எனவும் அது உடற்றெழிலி யல், மெய்யியல் போன்ற துறைகளிற் சாராது ஒரு தனிப்பட்ட துறையாக இருத்தல் வேண்டும் எனவும் வூண்ட் எடுத்துக்கூறிய கருத்துக்கள் இன்றும் உளவியலறிஞரால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அமெரிக்கா முதலிய நாடுகளிலே, உள வியற் பரிசோதனைக் கூடங்கள் நிறுவப்படுவதற்குக் காரணமாக இருந்த பரிசோதனை முறை உளவியலுக்கு வூண்டின் மாணவர்களே வித்திட்டனர்.

## தற்கால உளவியலுக்கு வழிவகுத்த ஏனைய காரணிகள்

உடற்றெழிலியல் முதலிய துறைகளில் ஏற்பட்ட அபிவிருத்தி யையும், வூண்டின் தலைமையில் நடத்தப்பட்ட பரிசோதனைகளையும் விட, வேறு பல அறிஞர்களுடைய கருத்துக்களும், தற்கால உள வியல் தோன்றுவதற்குக் கைகொடுத்தன என்பதை மறந்து விடலா காது. சாள்ஸ் டாவினுடைய கூர்ப்புக்கொள்கை இப்படியான கருத்துக்களுக்குரிய ஓர் உதாரணமாகும். மனிதனுக்கும் விலங்கு களுக்குமுள்ள தொடர்பைச் சாள்ஸ் டாவின் தம் கூர்ப்புக்கொள்கை மூலம் எடுத்துக்காட்டினர். எனவே, மனிதனைப் பற்றி விளங்கிக் கொள்வதன் பொருட்டு விலங்குகளினுடைய நடத்தைபற்றி ஆராய் வதற்கு உளவியலறிஞர் முற்பட்டனர். மேலும், விலங்குகள் சுற் ருடலுடன் எவ்வாறு தம்மைச் சீர்படுத்திக் கொள்ளுகின்றன என்பது பற்றி டாவின் எடுத்துக்கூறிய கருத்துக்கள், மனிதன் ஒவ் வொரு கட்டத்திலும் எவ்வாறு தன்னுடைய சூழலிலே தன்னைச் சீர்ப்படுத்திக் கொள்ளுகின்முன் என்பதை அறிந்து கொள்ளுவதற்கு

உளவியலறிஞருக்கு உதவியாக இருந்தன என்று கொள்ளுவதற்கு இடமுண்டு.

தற்கால உளவியல், பிரான்சிஸ் கோல்ரன் எனும் பிரபல ஆங்கில அறிஞருடைய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே எழுந்தது. மனிதர்களுக்கிடையில் காணப்படும் வேறுபாடுகள் பற்றியே கோல்ரன் ஆராய்ந்தார். நுண்மதி சம்பந்தமான வேறுபாடுகள் பற்றி அவர் விசேட கவனஞ் செலுத்தினர். நுண்மதிப் பரிசோதனை முறையைக் கண்டு பிடித்துத் தற்கால உளவியலுக்கு இவர் பெரும் சேவை செய்துள்ளார். இதனைவிட, தற்கால உளவியலறிஞருடைய ஆராய்ச்சி முறைகளில் முக்கிய இடம்பெறும் புள்ளிவிவரவியலுக்குரிய சில அடிப்படைக் கருத்துகளை உளவியலிலும் கையாளலாம் என்பதனை கோல்ரனே எடுத்துக் காட்டினர்.

19 ஆம் நூற்றூண்டளவில் மெஸ்மருடைய செல்வாக்குக் காரணமாக, துயினிலை (*Hypnosis*) போன்ற விடயங்கள் பற்றியும் பெரும் ஆர்வம் ஏற்பட்டிருந்தது. துயினிலை முறை, உள நோயாளிகளைக் குணப்படுத்துவதற்குரிய ஒரு முக்கியமான முறையாக அக்காலத்திலே கருதப்பட்டது. மேலும், உளநோய் ஏற்படுவதற்குரிய காரணங்கள் பற்றியும் 19 ஆம் நூற்றூண்டில் புதிய கருத்துக்கள் தோன்றியவண்ணம் இருந்தன. குறிப்பாக, போல் கிறேசியினுடைய (1850–1926) பெயரை இங்கே நாம் குறிப்பிடலாம். உளநோய் ஏற்படுவதிலே மூளை சம்பந்தமான காரணங்களின் முக்கியத்துவத்தை இவர் எடுத்துக்காட்டினர். அத்துடன், உளநோய்களை வகைப்படுத்தும் முறையினையும் இவர் வகுத்துத் தந்துள்ளார். சிஸ்மன்ட் பிரான்ஸிஸ் என்பவரும் அவருடைய ஆரம்பக் கொள்கையை 19 ஆம் நூற்றூண்டின் பிற் பகுதியிலேயே எடுத்துக்கூறினர். தற்கால உளவியல் தோன்றுவதற்கு இப்படியான உள வைத்திய முறைக் கொள்கைகளும் கைகொடுத்து உதவியுள்ளன என்று கருதுவதற்கு இடமுண்டு.

## தொழிற்பாட்டுளவாதம்

அமைப்புளவியல் மரபுக்கு மாறான கொள்கைகளைக் கூறிக் கொண்டு உருவான ஒரு மரபெனத் தொழிற்பாட்டுளவாதத்தைக் கூறலாம். 1890 களில் அமெரிக்காவிலுள்ள சிக்காகோ பல்கலைக் கழகத்தை மையமாகக்கொண்டு வளர்ந்த இந்த மரபின் மூலகர்த்தாக்கள் ஜே. ஆர். அன்ஜெல் (1869–1949), ஜோன் டூவி (1859–1952), ஏ. டபிள்யு. மூவர், ஜீ எம். மீட் ஆகியோராவர்கள். இக்கொள்கையிலே சாள்ஸ் டாவினுடைய கூர்ப்பு வாதத்தின் செல்வாக்கையும், வில்லியம் ஜேம்ஸ், போல்ட்வின் போன்ற உளவியலறிஞருடைய கருத்துக்களின் செல்வாக்கையும் பெரிதும் காணலாம்.

தொழிற்பாட்டுளவாதிகளின் கருத்தின்படி உளச்செயற்பாடுகள் பற்றியே உளவியலறிஞர் ஆராய்தல் வேண்டும். ஒரு மனிதனுடைய அக அல்லது புறக் காரணங்களை ஒட்டியே உளச் செயற்பாடுகள் நிகழுகின்றன. ஆனால் அச்செயற்பாடுகளை அவை நிகழ்வதற்கு வழிகோலிய நிலைமைகளிலிருந்து பிரிப்பது முடியாத காரியமாகும். அவ்வாறே ஓர் உளச்செயற்பாட்டினை அதனால் உண்டாகும் பெறுபேறுகளிலிருந்தும் பிரிக்க முடியாது. எனவே, ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ள செயல்முறையைப் பகுதிகளாகப் பிரிப்பதற்கு முயலுவதனால் அதன் உண்மையான தன்மையைப் புரிந்து கொள்ள முடியாது. இதனாலேயே அமைப்புளவியல் தவறான ஒரு கொள்கையெனத் தொழிற்பாட்டுளவாதிகள் எடுத்துக்காட்டினர். ஓர் உள நிலைமையினை, அதன் மூலக்கூறுகளாகப் பிரிப்பதற்கு அமைப்புளவாதிகள் முயன்றனர். இதற்குப் பதிலாக, தொழிற்பாட்டுளவாதிகள், ஓர் உளச்செயற்பாட்டினை முழுமையாக எடுத்து (பகுதிகளாகவோ அல்லது மூலக்கூறுகளாகவோ பிரிக்காது) சம்பந்தப்பட்ட மனிதனுக்கோ, பிராணிக்கோ அதனால் பூர்த்தியாக்கப்படும் கருமத்திற்கேற்ப அதனை விளங்கிக் கொள்ள வேண்டுமெனக் கூறினார்கள். எங்களுடைய உளச்செயற்பாடுகள் மூலம் எமது வாழ்க்கை சம்பந்தமான ஒரு கருமம் நிறைவேற்றப்படுகின்றதெனத் தொழிற்பாட்டுளவாதிகள் கருதினார்கள். சிந்தனைவேகம், துணிவு முதலிய எச்செயலை எடுத்துப் பார்த்தாலும் அவற்றின் மூலம், சூழலுடன் பொருந்துவதற்குப் பயன்படுகின்ற ஒரு கருமம் நிறைவேற்றப்படுகின்றது என அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். இக்கருத்தை இன்னொருவாறு கூறுவதாயின், எங்களுடைய உளச் செயற்பாடுகள் எங்கள் வாழ்க்கைக்குப்பயன்படுகின்றன என்று கூறலாம். எனவே, நாம் வாழ்வதற்கு உளச்செயற்பாடுகள் பயன்படுகின்ற முறையை விளங்கிக் கொள்வதன் மூலம் அந்த உளச்செயற்பாடுகளின் தன்மையையும் விளங்கிக் கொள்ளலாம் என்பது தொழிற்பாட்டுளவாதிகளினுடைய கொள்கையாகும்.

பரிசோதனை முறைகளிலே ஆர்வத்தை ஏற்படுத்தியதன் மூலம் உளவியல் வளர்ச்சிக்கு இம்மரபு பெரும் சேவை செய்துள்ளது. நடைமுறைப் பிரச்சினைகளில் கவனத்தை ஈர்த்தமையும் தொழிற்பாட்டுளவாதிகள் ஆற்றிய முக்கியமான சேவையாகும். டூயி என்பார், கல்வி சம்பந்தமான உளவியற் பிரச்சினைகள் பற்றி மிக ஆர்வம் காட்டிய ஓர் உளவியலறிஞராவார். இன்னும், தொழிற்பாட்டுளவாதிகள், அமைப்புளவியல் வாதிகளைக் கண்டனஞ்செய்தமையின் விளைவாக, இந்த இரு மரபினருக்குமிடையில் ஏற்பட்ட விவாதங்கள், மேலே விளக்கப்படவுள்ள மற்றுமொரு மரபு தோன்றுவதற்கு ஓரளவுக்குக் காரணமாக இருந்தன என்றும் கொள்ளலாம்.

அமைப்புளவியல் போன்று தொழிற்பாட்டு உளவியலும் கடுமையாகக் கண்டிக்கப்பட்டது. தொழிற்பாட்டு உளவியலுக்கு மாறாக

எழுந்த கண்டனங்களுள் ஒன்று, அதில் பொருள் தெளிவற்ற பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதாகும். எடுத்துக்காட்டாக, தொழிற்பாடு என்ற பதத்தின் பொருள் தெளிவில்லை என்று கூறப்பட்டுள்ளது. தொழிற்பாடு என்ற பதம் சில சந்தர்ப்பங்களிலே செயல் என்ற பொருளைக் கொடுக்கும் முறையிலும் வேறு சில சந்தர்ப்பங்களிலே, செயல் மூலம் கிடைக்கும் விளைவைக் குறிக்கும் முறையிலும் கையாளப்பட்டுள்ளது. எங்கள் முன்னிலையில் சுவாலையிட்டு எரிகின்ற ஒரு தீயைக் காண்பது ஒரு செய்ற்பாடு. அந்தத் தீயைக் கண்டு அதிலிருந்து தூரப்போதல், காண்பதனுல் ஏற்படும் ஒரு விளைவு. தொழிற்பாட்டுளவாதத்தைக் கண்டனஞ் செய்யும் சிலர், தொழிற்பாடு எனும் பதம் இந்த இரு கருத்துக்களிலும் கையாளப்பட்டுள்ளமையினுல் அதன் பொருள் தெளிவில்லை என்று கூறுகின்றனர்.

## சமகால உளவியல் மரபுகள்

20 ஆம் நூற்றுண்டின் ஆரம்ப காலத்திலே, கற்றல் போன்ற உளவியலுக்குரிய புதிய பகுதிகளிலே உளவியலறிஞருடைய கவனஞ் சென்றது. அதேவேளையில், அமைப்புளவியல்வாத, தொழிற்பாட்டுளவாத மரபுகளின் குறைபாடுகள் பற்றியும் அவர்களுடைய கவனஞ் சென்றது. இவற்றின் விளைவாக, அமைப்புளவியலுக்கும், தொழிற்பாட்டுளவியலுக்கும் உளவியலில் இருந்த உரிமையைத் தட்டிப் பறித்துக்கொண்டு மேலும் பல உளவியல் மரபுகள் தோன்றலாயின. அவை, நடத்தைவாதம், கெஸ்டால்ட்வாதம், உளப் பகுப்புவாதம் என்பனவாகும். இந்த நூற்றுண்டிலே, உளவியல் வரலாற்றில், மேற்கூறிய மூன்று மரபுகளினதும் விருத்தியைக் காணலாம் என்றதனுலே இம்மரபுகளைச் சமகால மரபுகளெனக் குறிப்பிடலாம்.

## நடத்தைவாதம் (*Behaviourism*)

உளவியலெனப்படுவது யாராலும் விளங்கிக் கொள்ளக் கூடியதும், மனிதனதும், விலங்குகளினதும் நடத்தையை ஆராய்கின்றதுமான ஒரு துறையென ஒரு மரபினர் கூறியுள்ளதே நடத்தைவாதத்துக்குரிய விளக்கமாகுமென நாம் ஆரம்பத்திலே கூறியுள்ளோம். இம்மரபு அமெரிக்க உளவியலறிஞரான யோன் புரோடஸ் வொட்சன் (1878–1958) என்பவரால் தாபிக்கப்பட்டது. 1913, 1914 ஆம் ஆண்டுகளிலே வொட்சன் எழுதிவெளியிட்ட நூல்களிலே விளக்கப்பட்ட நடத்தைவாதம் குறுகிய காலத்துக்குள் உளவியலறிஞர் மத்தியில் மிகவும் பிரபலமடைந்தது. அது பிரபலமடைந்ததோ, இல்லையோ எனினும், வொட்சன், 1915 இல் அமெரிக்க உளவியற் சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். மேலும், நடத்தைவாதக் கருத்துகளை ஏற்றுக்கொண்ட உளவியல

றிஞர் தொழிற்பாட்டுவாதத்துக்கும், அமைப்புளவியலுக்கும் மாறான ஒரு மரபாகச் சேர்ந்துகொண்டனர். இம்மரபு 1920 களில், அமெரிக்க உளவியல் மரபுகளுள் சிறப்பான ஒரு மரபாகத் திகழ்ந்தது.

நடத்தைவாதக் கருத்துகளும், காலத்துக்குக் காலம் மாற்ற மடைந்து கொண்டிருந்தன. சில பிற்கால உளவியலறிஞர் வொட்சனுடைய சில கருத்துகளை மாற்றியமைத்தனர். இந்த மாற்றங்களைக் கவனத்துக்கு எடுத்துக் கொண்டால் நடத்தைவாதத்தை இரண்டு முக்கியமான பகுதிகளாகப் பிரிக்கலாம். அதாவது ஆரம்ப நடத்தைவாதம், பிற்கால நடத்தைவாதம் என இதனை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

### ஆரம்ப நடத்தைவாதம்

ஆரம்ப நடத்தைவாதம் எனப்படுவது, வொட்சன் விளக்கிய கருத்துகளை அடிப்படையாகக் கொண்டெழுந்த கொள்கையாகும். கண்ணுற் பார்க்கக் கூடிய ஒன்றைப் பற்றியும், காதால் கேட்கக் கூடிய ஒன்றைப் பற்றியுமே உளவியலறிஞன் ஆராய்தல் வேண்டும் என்பது வொட்சனுடைய கருத்து. இரசாயனவியலறிஞன் தமது பரிசோதனைக் கூட்டத்திலே உள்ள ஓர் இரசாயனப் பொருளை இன்னொருவருக்கு எடுத்துக்காட்டக் கூடியதாக இருக்கின்றது. அது போலவே, உளவியலறிஞன் ஆராய்கின்ற விடயமும் இன்னொருவருடைய பின்னோக்குக்குத் தோன்றக்கூடிய ஒன்றாக இருத்தல் வேண்டும். வொட்சன் எடுத்துக்காட்டியுள்ளவாறு மனிதர்களினதும், விலங்குகளினதும் நடத்தை மாத்திரமே அவ்வாறு பின்னோக்கப்படக் கூடிய ஒன்றாகும்.

வொட்சன் தமது நடத்தைவாதக் கருத்தைத் தூண்டிகள் (*Stimuli*) துளங்கல்கள் (*Responses*) எனும் இரு பதங்களைப் பயன் படுத்தியே விளக்கியுள்ளார். சிறு குழந்தைக்கு முன்னே ஒரு சொக்லெட் துண்டை வைத்தால் அக்குழந்தை அதனை எடுத்துத் தன்வாயிற் போட்டுக் கொள்ளும். இங்கே, சொக்லெட் துண்டு ஒரு தூண்டியாகும். அதனை எடுத்து வாயிற் போட்டுக் கொள்ளுதல் துளங்கலாகும்.

வொட்சனுடைய நடத்தைவாதத்தின்படி, மிகச் சிக்கலான ஒரு நடத்தையையுமே தூண்டி — துளங்கல் எனும் கருத்தைப் பயன்படுத்தி விளங்கிக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காணுவதிலே பிரச்சினைக்குக் காரணமாக இருந்த விடயம் தூண்டியும், பிரச்சினைக்குரிய தீர்வு துளங்கலுமாகும். பள்ளிக்கூடத்து மணிச் சத்தத்தினை ஒரு தூண்டியாக எடுத்துக்கொண்டால், சில ஆசிரியர்கள் தாம் படிப்பித்துக் கொண்டிருந்த பாடத்தினை நிறுத்திவிட்டு மற்றொரு பாடத்தினை ஆரம்பித்தல், விளையாட்டு மைதானத்திலே விளையாடிக்கொண்டிருந்த

மாணவர் தமது வகுப்பு அறைகளுக்குத் திரும்பிச் செல்லுதல் போன்று அங்கே காணக்கூடும் துளங்கல்கள் எத்தனை என்று நீங்களே சிந்தித்துப் பாருங்கள். மேலும், உங்களுடைய நாளாந்த வாழ்க்கையிலே, நீங்கள் செய்கின்ற செயல்களுக்கும், பேசுகின்ற வார்த்தைகளுக்குமுரிய தூண்டிகள் யாவையெனவும் சிந்தித்துப் பாருங்கள்.

வொட்சனுடைய கருத்தின்படி துளங்கல்களை வெளியீடானவை (*Explicit*) என்றும், உள்ளீடானவை (*Implicit*) என்றும் இரு வகையாகப் பிரித்தல் கூடும். வெளியீடான துளங்கலெனப் படுவது எமது நடத்தைக்கு நேரே இலக்காகும் துளங்கலேயாகும். முழந்தாளில் நிற்றல், சொக்லெட் சாப்பிடுதல், பிரச்சினை தீர்த்தல் ஆகியன எல்லாம் வெளிக்காட்சியின் பாற்பட்ட துளங்கல்களாகும். ஆனல் சில துளங்கல்கள் இப்படியாக எமது நடத்தையில் அடங்குவதில்லை. எடுத்துக்காட்டாக, எமது உடலிலுள்ள தசை இயங்குதல், சுரப்பிகளிலிருந்து சுரப்புகள் வருதல் முதலியவற்றைக் கூறலாம். இவையும் சிற்சில தூண்டிகள் காரணமாகவே ஏற்படுகின்றன. இப்படியான துளங்கல்களை நாம் நேராக அவதானிக்க முடியாதெனினும், ஏற்ற உபகரணங்களைப் பயன்படுத்தி இவற்றையும் அவதானிக்கலாமென்பது வொட்சனுடைய கருத்து.

ஆயின், அமைப்புளவியல்வாதிகள் ஆராய்வதற்கு முயலுகின்ற நனவினைக் கூர்மையான உபகரணங்களைப் பயன்படுத்தியுமே நோக்க முடியாது என்று வொட்சன் காட்டியுள்ளார். எவ்வாறேனும் அவதானிக்க முடியாத விடயங்கள் பற்றி ஆராய்வதற்கு முயல்வதனல், புதிய கருத்துகளன்றிப் பல அபிப்பிராய பேதங்களே ஏற்படக் கூடும். உண்ணோக்கு முறையின் மூலம். பயிற்சியுடைய அவதானி ஒருவனல் மாத்திரமே நற்பயனடைய முடியுமென டிச்சனரே காட்டியுள்ளார். ஆனல், வொட்சன், பயிற்சியுடைய அவதானிகள் மத்தியிற் கூட சிற்சில உண்மைகள் பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருக்கக்கூடும் என்று எடுத்துக்காட்டியுள்ளார். நனவைப் புலன்களைக் கொண்டு அவதானிக்க முடியாது என்றதினல் அந்தக் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதற்குரிய வாய்ப்பு இல்லை. (உண்ணோக்கு முறைக்கு மாருகக் கூறப்பட்டுள்ள கண்டனங்களை இன்னொரு முறை வாசிக்க)

எனவே, உளவியலறிஞன் நனவு பற்றி ஆராய்வதைக் கைவிட்டு நடத்தை பற்றி ஆராய்தல் வேண்டும் என்றும் அதற்கு விஞ்ஞான அடிப்படையிலான முறையைக் கையாள வேண்டும் என்றும் வொட்சன் எடுத்துக் காட்டியுள்ளார். நடத்தை பற்றி ஆராயும் உளவியலறிஞனுக்கு ஏனைய அறிஞருக்குப்போல எதிர்வு கூறும் வல்லமை கிடைக்குமெனவும் வொட்சன் எடுத்துக்காட்டியுள்ளார். தூண்டி-துளங்கல் விதிகளைவிளங்கிக் கொண்டால், ஒரு தூண்டியைக் கண்டதும் அதன் துளங்கல் என்னவாக இருக்கும் என்று கூறக்கூடியதாக இருக்கும்.

வொட்சனுடைய இக்கருத்துகளை ஒத்த கருத்துகளையுடைய உளவியலறிஞர் பலர் இருந்தனர். எட்வின் விசோல், ஹோல்ட் வொல்டர், எஸ். கண்டர், மக்ஸ்மயர் ஆகியோர் அவர்களுள் முக்கியமானவர்கள். இந்த உளவியலறிஞரும் ஆரம்ப நடத்தை வாதிகளாகவே கருதப்படுகின்றனர்.

ஆரம்ப நடத்தைவாதத்தின் மூலம் உளவியலுக்கு ஏற்பட்டுள்ள நன்மைகளுள் முக்கியமாக இரண்டினைக் கூறலாம்: முதலாவது, விஞ்ஞான அடிப்படையிலான முறைகளைக் கையாளும் பரிசோதனை முறைத் துறையெனும் நிலைக்கு உளவியல் கொண்டு வரப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டியமை. பரிசோதனை உளவியலின் தந்தையென வூண்ட் கொண்டாடப்படுகின்றாரெனினும், அவருடைய உளவியற் கொள்கையில் அறிவியலியல்புகளை அதிகம் காண முடியாதென்பது வொட்சனுடைய கண்டனத்திலிருந்து தெளிவாகும். இரண்டாவது, விலங்கு உளவியலுக்கும், குழந்தை உளவியலுக்கும் உளவியற்றுறையில் ஓர் இடத்தினைப் பெற்றுக் கொடுத்து அவற்றின் அபிவிருத்திக்கு வழி வகுத்தமை. நாம் ஆரம்பத்திலே எடுத்துக்காட்டியுள்ளவாறு, உளவியலானது அறிவியல் சம்பந்தமான ஆராய்ச்சியாக இருந்த காலத்திலே, குழந்தை உளவியலும், விலங்கு உளவியலும் அதில் இடம் பெற்றிருக்கவில்லை. உண்ணோக்கு முறையின் மூலம் தமது அறிவைப் பரிசோதனை செய்யும் வல்லமை விலங்குகளுக்கும், குழந்தைகளுக்கும் இல்லையென்பதே காரணம்.

வொட்சனுடைய உளவியற் கருத்துகள் உளவியலிலே பெரும் பரபரப்பை ஏற்படுத்தினவெனினும், அக்கருத்துக்களும் சில உளவியலறிஞரால் கண்டிக்கப்பட்டன. குறிப்பாக, நனவு பற்றிய ஆராய்ச்சியை உளவியலறிஞன் கைவிடுதல் வேண்டுமென்ற கருத்துப் பெரிதும் கண்டனத்துக்குள்ளானது. மனிதனுடைய நடத்தையை அவதானித்து அவனுடைய புலனுணர்வு முதலிய அனுபவங்களை அறிந்து கொள்ள முடியாதென்று உளவியலறிஞர் மாத்திரமன்றி மெய்யியலறிஞரும் எடுத்துக்காட்டியுள்ளனர். பழைய உண்ணோக்கு முறையைக் கையாண்டு பகுப்பு முறையை ஆராயும் போது தவறு ஏற்படுமெனின், இன்னொரு முறையைக்கையாள வேண்டுமே தவிர, பகுப்புப் பற்றிய ஆராய்ச்சியைக் கைவிடுதலாகாது என்று கெஸ்டால்ட் உளவியலறிஞர் எடுத்துக்காட்டியுள்ளனர். தூண்டி—துளங்கல் முறையை மாத்திரம் கொண்டு நடத்தையை முற்றாக விளங்கிக் கொள்ள முடியாது என்பது, வொட்சனுடைய நடத்தைவாதத்திற்கு மாறாகக் கூறப்பட்ட மற்றுமொரு கண்டனமாகும். இக்கண்டனங்கள் பிற்கால நடத்தைவாதிகள் சிலராலேயே கூறப்பட்டன.

## பிற்கால நடத்தைவாதம்


1930 களின் பின்னர் நடத்தைவாத மரபில் முக்கிய இடத்தை வகுத்த ஈ. சீ. டொல்மன் (1886—1961), சீ. எல். ஹல் (1884—1952), பீ. எவ். ஸ்கினர் (1904— ) போன்ற உளவியலறிஞருடைய கருத்துகள் ''பிற்கால நடத்தைவாதம்'' என்று குறிப்பிடப் படும். இவர்களுள் முக்கியமாக ஈ. சீ. டொல்மனுடைய கருத்துகளே நடத்தைவாதத்தைப் புதிய பாதையிலே திருப்பியதாகத் தோன்றுகின்றது. கெஸ்டால்ட் உளவியலிலே பயிற்சிபெற்ற இவர் வொட்சனுடைய நடத்தைவாதத்தையும் கெஸ்டால்டினுடைய கருத்துகளேயும் ஒன்று சேர்த்து ஒரு புதிய நடத்தைவாதக்கொள்கையை விளக்கினர். டொல்மன் எடுத்துக்காட்டியுள்ளபடி, துளங்கல் எனப்படுவது தூண்டியினுல் மாத்திரம் நிர்ணயிக்கப்படுவதில்லே. ஒரே தூண்டிக்கு, சில வேளேகளில் இருவர் இருவேறு வழிகளிலே நடந்து கொள்ளுகின்றனர். நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளிலிருந்து உதாரணம் கூறுவதாயின், ஒரு கேலிப்பேச்சைக் கேட்டு ஒருவர் அழுவதையும், அதே கேலிப் பேச்சைக் கேட்டு இன்னெருவர் சிரிப்பதையும் நாம் காண்கின்ருேம். இங்கே, தூண்டியான கேலிப்பேச்சு இருவருக்கும் ஒன்ருக இருந்தபோதிலும், அவர்கள் இருவரிடத்திலும் அதற்கு இருவகையான துளங்கல்கள் காணப்படுகின்றன. துளங்கலே விளங்கிக் கொள்வதற்கு தூண்டியை விட மேலும் பல விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும் என்பது டொல்மனுடைய கருத்து. அவ்விடயங்களே அவர் ''குறுக்கிடும் மாறிகள்'' (*Intervening variables*) என்று குறிப்பிட்டுள்ளார். குறுக்கிடும் மாறிகள் என்பதனுல் அவர், ஒருவருடைய இயல்பு, தேவை, கடந்த கால அனுபவம் ஆகியவற்றைக் குறிப்பிட்டார். மேற்கண்ட உதாரணத்திலே, அவர்கள் இருவரினதும் வேறுபட்ட துளங்கல்களே விளங்கிக் கொள்வதற்கு அவர்கள் இருவரினதும் இயல்பு, கடந்த கால அனுபவம் ஆகியவற்றிலுள்ள வேறுபாடுகளே ஆராய்தல் வேண்டும். எனவே, தூண்டி-துளங்கல் என்ற இரு காரணிகளுடன் உயிரி என்பதையும் சேர்த்து, தூண்டி-உயிரி-துளங்கல் என்ற முறையிற் பழைய நடத்தைவாதச் சூத்திரத்தை டொல்மன் மாற்றியமைத்தார். குறுக்கிடும் மாறி எனப்படுவது, உயிரி அல்லது ஆளுடன் தொடர்புடையது என்றமையினுலேயே உயிரி எனும் பதம் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்கினர், ஹல் ஆகிய இருவரும் டொல்மனுடைய நடத்தைவாதத்தை முற்றிலும் ஏற்றுக்கொள்ளவில்லேயெனினும், அவர் அளித்த புதிய சூத்திரத்தைத் தமது பரிசோதனேகளிலே கையாண்டனர். ஆனுல், நடத்தைவாதத்தைக் கண்டனஞ் செய்த சிலர் புதிய நடத்தைவாதக் கொள்கைகளேயுமே ஏற்றுக் கொள்ளவில்லே. இவ்விமரிசகர்கள், உளவியலறிஞன் மனிதனுடைய அனு

பவங்களையும் கவனத்திலெடுத்துக் கொள்ள வேண்டுமென்று எடுத்துக் கட்டினார்கள். புதிய நடத்தைவாதிகளுமே அனுபவம் பற்றிப் போதிய கவனஞ் செலுத்தவில்லை என்பது இவ்விமரிசகர்களுடைய கருத்து.

## கெஸ்டால்ட் மரபு

அமெரிக்காவில் நடத்தைவாதம் தோன்றிய காலத்திலேயே ஜேமன் நாட்டிலே கெஸ்டால்ட் மரபு தோன்றியது. 1912 இல் ஒக்ஸ் வதைமர், குர்ட் கொவ்கா, வுல்வ்காவ் கொலர் எனும் உளவியலறிஞர் மூவரும் ஒன்று சேர்ந்தே கெஸ்டால்ட் மரபைத் தோற்றுவித்தனர். நடத்தைவாதிகளைப் போலவே இந்த உள வியலறிஞரும் வூண்டினுடைய அமைப்புளவியலிலே குறைபாடுகள் இருக்கக் கண்டனர். அத்துடன் நடத்தைவாதக் கொள்கையும், நிறைவான ஒரு கொள்கையன்று எனக் கெஸ்டால்ட் உளவியல றிஞர் கருதினர். உளவியல் பற்றி கெஸ்டால்ட் மரபினர் கூறும் கருத்து யாது? கெஸ்டால்ட் (*Gestalt*) எனும் ஜேமன் பதம், படிவம் (*Shape*) அல்லது வடிவம் (*Form*) என்ற கருத்தையுடையது. கெஸ்டால்ட் உளவியலறிஞர் கருத்தின்படி, ஒரு பொருளின் வடிவம் என்பது அப்பொருளை உருவாக்கியுள்ள கூறுகளின் சேர்க்கை மாத்திரமன்று. ஓர் எடுத்துக் காட்டினைப் பார்ப்போம். சில வெள்ளை நிறப் பகடைகளையும், செந்நிறப் பகடைகளையும் எடுத்து அவற்றை ஓர் ஒழுங்கின்படி வைத்தால் ஓர் வடிவம் உண்டாகும்.



ஒவ்வொரு பகடையையும் தனித்தனியே எடுத்து அந்த உருவத்தினை விளங்கிக்கொள்ள முடியாது. காரணம், பகடைகளைக் குறிக்கப்பட்ட ஓர் ஒழுங்கின்படி அடுக்கினுல் மாத்திரமே குறிக்கப்பட்ட வடிவம் உண்டாகும். இன்னெருவாறு கூறுவதாயின், பகடைகளை "ஒன்ருக" எடுத்தால் மாத்திரமே உருவம் உண்டாகும். நாம் இன்னெரு உதாரணத்தினை எடுப்போம். அது, கிறிஸ்தியின் வன் வீருன்வெல்ஸ் (*Christian Von Ehrenfels*) என்ற ஒஸ்றிய தேச உளவியலறிஞனுல் எடுத்துக்காட்டப்பட்டுள்ள ஓர் உண்மை. அவர் எடுத்துக்காட்டியுள்ளபடி, பல சுரங்களைக் "குறிக்கப்பட்ட ஓர் ஒழுங்கின்படி" ஒன்று சேர்த்தபோது குறிக்கப்பட்ட ஓர் ஓசை உண்டாகும். அந்தச் சுரங்களையே வேறு ஓர் ஒழுங்கின்படி சேர்த்தால் வேறு ஓசை உண்டாகும். மேலும், வேறுபட்ட சுரங்களைக் கொண்டு ஒரே ஓசையை உண்டாக்கவும் முடியும். ஆகையினுலே, ஒவ்வொரு சுரத்தையும் தனித்தனியே எடுப்பதனுல் ஓசை என்னவென்று அறிந்து கொள்ள முடியாது.

இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு தமது கொள்கையை உருவாக்கிய கெஸ்டால்ட் மரபினர், எமது அனுபவத்திலடங்கும் விடயங்களை நாம் கூறுகளாகப் பகுக்காது 'முழுமையாக' விளங்கிக் கொள்ளல் வேண்டுமென எடுத்துக்காட்டினர். எனவே அனுபவம் அதன் மூலக்கூறுகளாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று வூண்ட் கூறிய கருத்துக்குக் கெஸ்டால்ட் கொள்கை மாருனது என்பது தெளிவு. அனுபவத்தினை அதன் பகுதிகளாகவோ, மூலக்கூறுகளாகவோ பிரிப்பதனுல் அதன் உருவம் அல்லது கெஸ்டால்ட் எனப்படுவது அதன் இயல்புகளை இழந்துவிடுமென்று கெஸ்டால்ட் உளவியலறிஞர் எடுத்துக் காட்டினர்.


இந்த உளவியலறிஞர் கூற்றுப்படி, அனுபவத்தை முழுமையாக எடுத்துக்கொண்டபோது அதில் ஓர் அமைப்பு இருக்கின்றது என்பதை நாம் நிச்சயம் காணலாம். அந்த அமைப்பினை நிர்ணயிக்கும் தத்துவம் யாது என்று ஆராய்வதில் கெஸ்டால்ட் உளவியலறிஞர் தமது கவனத்தைச் செலுத்தினர். முக்கியமாக, அகக்காட்சி மூலம் நாம் பெறும் அனுபவத்தின் அமைப்புப் பற்றியும் அந்த அமைப்பின் தத்துவம் பற்றியும் கெஸ்டால்ட் உளவியலறிஞர் ஆராய்ந்தனர்.

24 ஆம் பக்கத்திலுள்ள உருவத்தை உற்றுப்பார்த்து அதிலே உங்களுக்கு என்ன தெரிகின்றது என்று கூறுக.

ஒருவருக்கு அங்கே பூச்சாடியொன்று இருப்பதாகத் தோன்றக் கூடும். இன்னெருவருக்கு இரண்டு முகங்கள் தோன்றக்கூடும். ஒரே படம் எங்ஙனம் இருவிதமாகத் தோன்றுகின்றது? இதற்குக் காரணம் உருவப் பின்னணியிலுள்ள வேறுபாடு என்று கெஸ்டால்ட் கோட்பாட்டைக் கொண்டு நாம் விளக்கம் கூறலாம். கெஸ்டால்ட் உளவியலறிஞர் கருத்தின் படி

ஓர் உருவம் அதன் பின்னணியைப் பொறுத்தே எமக்குத் தோன்றுகின்றது. சுவரில் தொங்கவிடப்பட்டிருக்கும் ஒரு படத்தைப்பார்க்கும்போது படத்தை உருவமாகவும், சுவரைப் பின்னணியாகவும் கண்டு கொள்ளலாம். கீழ்க்காணும் உருவத்திலே இரு முகங்களையும் உருவங்களாகப் பார்க்கும்போது இரு முகங்களுக்கும் இடையிலிருக்கும் பகுதி பூச்சாடியாகவன்றி இரு முகங்களினதும் பின்னணியாகத் தோன்றுகின்றது. பூச்சாடியைப் பார்க்கும்போது இரு முகங்களுமுள்ள பகுதிகள் பூச்சாடியின் பின்னணியாகத் தோன்றுகின்றன. (அகக்காட்சி அனுபவத்தின் இயல்பினை விளக்கும் கெஸ்டால்ட் கோட்பாடு பற்றி அகக்காட்சி பற்றிய பகுதியில் விரிவாக ஆராய்வோம்.)

கெஸ்டால்ட் உளவியல் மரபினருடைய கருத்தின்படி, பிரச்சினைக்குத் தீர்வு காணும்போது தவறுவிட்டு முயலாது ஒரே முறையில் தீர்வு என்னவென்று காணக்கூடிய வல்லமை எமக்குண்டு. பிரச்சினையை முழுமையாக எடுத்து நோக்கும்போது அதற்குத் தீர்வு ஒரே முறையிலேயே கிடைக்குமெனக் கோலர் எடுத்துக் காட்டியுள்ளார்.



இம்மாதிரியான கெஸ்டால்ட் உளவியற் கருத்துகள் நடத்தைவாதத்திற்கு ஓர் சவாலாக அமைந்தன என்பது கவனிக்கப்படல் வேண்டும். அனுபவங்கள் பற்றிய ஆராய்ச்சியை உளவியல் துறையிலிருந்து அகற்றிவிடுவதற்கு நடத்தைவாதிகள் மேற்கொண்ட முயற்சிக்குக் கெஸ்டால்ட் உளவியலறிஞருடைய ஆதரவு கிடைக்கவில்லை. அகக்காட்சி, கற்றல், பிரச்சினை தீர்த்தல் ஆகியவற்றை வொட்சன் விளங்கிக் கொண்ட முறையைவிட வேறுபட்ட முறையிலே விளங்கிக்கொள்ளலாம் எனக் கெஸ்டால்ட் உளவியலறிஞர் எடுத்துக்காட்டினர்.

கெஸ்டால்ட் உளவியலறிஞர், 1920 களிலும், 1930 களிலும் மாத்திரமே உளவியற்றுறையில் முக்கியத்துவம் வகிக்கும் வாய்ப்புப் பெற்றிருந்தனர். நாசி ஆதிக்கம் காரணமாக கெஸ்டால்ட் உள வியலறிஞர் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு வந்ததன் பின்னர் அவர்களுடைய கருத்துகள் நடத்தைவாதக் கருத்துகளைப் போன்ற மற்றுமொரு உளவியற் கொள்கையுடன் கலந்து கொண்டதாகத் தோன்றுகின்றது. டொல்மனுடைய உளவியற் கருத்துகளைக் கொண்டே இதனை நாம் ஊகிக்கக் கூடியதாகவுள்ளது.

## உளப் பகுப்பு மரபு

உளப்பகுப்பு மரபெனப்படுவது உளவியலறிஞர்களுக்கிடையில் மாத்திரமன்றிச் சாதாரண மக்கள் மத்தியிலுமே பிரபலமடைந் துள்ள ஒரு மரபாகும். எமது நாட்டுப் புதினப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியவற்றிலுமே இம்மரபு பற்றி அடிக்கடி கட்டுரை கள் வெளிவருவதை நாம் காண்கின்றோம். உளப்பகுப்பு மரபினால் கூறப்பட்ட சில உண்மைகள் காரணமாக, சமுதாயத்திலே பெரும் பரபரப்பு ஏற்பட்டமையினால் அம்மரபு மிகப் பிரபலமடைந்தது.

பிரபல உளவியலறிஞரான சிக்மன்ட் புறொய்டே இம்மரபின் தாபகராவார். நடத்தைவாதமும், கெஸ்டால்ட் உளவியலும் தோன்றியபோது புறொய்டின் முக்கியமான சில கட்டுரைகள் வெளிவந்திருந்தனவெனினும், உளப்பகுப்பு முறை 1920 களின் பின்னரே உளவியலில் பிரபலமான இடத்தைப் பெற்றது.

புறொய்டைப் பின்பற்றியோர் சிலர் பிற்காலத்திலே புறொய்டினு டைய சில கருத்துகளைக் கண்டித்துக்கொண்டு தமது சொந்த உள வியற் கொள்கைகளை விளக்கினார்கள். காள் யுங், அல்பிறெட் அடிலர் ஆகியோர் அவர்களுள் முக்கியமானவர்கள். யுங்கினு டைய உளவியல் முறையானது உளப்பகுப்பு உளவியலென்றும் (*Analytic Psychology*) அடிலருடைய உளவியல் முறையானது தனியாள் உளவியலென்றும் (*Individual Psychology*) குறிப்பிடப் படுகின்றன.

இப்படியான உளப்பகுப்புவாதத்தினுள்ளே புதிய ஒரு உளவியல் முறை தோன்றியமையினால் அதன் கொள்கைகள் நுணுக்கமாகப் பரிசீலனை செய்யப்பட்டன. இப்போது, உளப்பகுப்புவாதம் பற்றிப் பல நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### புறொய்டின் உளப்பகுப்புவாதம்

சிக்மன்ட் புறொய்ட் வைத்தியத் துறையிலே பட்டம் பெற்றா ரெனினும் உளவியற்றுறையில் அதிக நாட்டம் கொண்டிருந்தார். சித்துயா (*Hysteria*) எனப்படும் உளநோய் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த புறூவர் (1842—1925) எனும் வியன்னா வைத்தியரை இவர் சந்தித்தமை இவருடைய வாழ்க்கையிலே ஒரு

முக்கியமான திருப்பத்தை ஏற்படுத்தியது. சித்துயாவுக்கு வைத்தியஞ் செய்வதற்கு அக்காலத்திலே துயினிலை முறை கைக்கொள்ளப்பட்டது. புறூவருடன் சில்காலம் பரிசோதனை வேலைகளில் ஈடுபட்டிருந்த புறெய்ட், பின்னர் பிரான்சு சென்று துயினிலைத் துறையிலே நிபுணராக இருந்த சாகோ (Charcot) என்பவரிடம் துயினிலை முறையில் விசேட பயிற்சி பெற்றார். அதன் பின்னர் வியன்னு நகர் சென்று புறூவருடன் சேர்ந்து மேலும் பரிசோதனைகள் செய்வதில் ஈடுபட்டார். அப்போது, சித்துயாவைத் துயினிலை முறையைக் கொண்டு பூரணமாக மாற்ற முடியாதென இவர்கள் கண்டனர். எனவே ஒரு புதிய முறையைக் கண்டுபிடிக்க வேண்டுமெனும் குறிக்கோளுடன் புறெய்ட் பல பரிசோதனைகளை நடத்தி ஈற்றிலே ஒரு முறையைக் கண்டுபிடித்தார். அம்முறையின்படி, நோயாளியைத் துயினிலைக்கு கொண்டுவராது அவர் சுதந்திரமாகப் பேசுவதற்குச் சந்தர்ப்பமளிக்கப்படுகின்றது. இப்படியாகப் பேசும் போது நோயாளியினுடைய மறைந்த கடந்த காலம் பற்றிய உண்மைகள் வெளிவரும் என்று புறெய்ட் கருதினர். சில சந்தர்ப்பங்களிலே நோயாளி சில உண்மைகளைக் கூறுவதற்குப் பின்னிற்கக் கூடும். அப்படியாக நோயாளி கூருதுவிடுவது அவர் அடக்கிய உண்மைகளையே என்றும், அவற்றை வெளிவரச் செய்வதனுல் அவருடைய பிரச்சினை தெரியவரும் என்றும் புறெய்ட் கருதினர். எனவே புறெய்ட், துயினிலை முறையைக் கைவிட்டுவிட்டு 'சுதந்திரமாகப் பேசும் முறையினை மாத்திரமே கைக்கொண்டார். இப்புதிய முறை கட்டில் சேர்க்கை (Free Association) எனப்பட்டது. உளப்பகுப்பு என்பது கட்டில் சேர்க்கை முறையினைப் பயன்படுத்துவதனைக் குறிக்கும். உளப்பகுப்பு முறையைப் பயன்படுத்தி, மனிதன் பற்றிப் புறெய்ட் பல கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இக்கருத்துகளே புறெய்டின் உளப்பகுப்புவாதமாக அமைந்துள்ளன.

புறெய்டின் கருத்தின்படி உளத்தை மூன்று 'பகுதிகளாகப்' பிரிக்கலாம். அதாவது, நனவுநிலை, முன்நனவுநிலை, நனவிலிநிலை எனும் மூன்று பகுதிகளாக உளத்தைப் பிரிக்கலாமென்று புறெய்ட் கருதினர். நனவென்பது ஒருவர் முயல்வின்றி நினைவுகூரக் கூடிய ஒன்றை அல்லது ஒருவருடைய நினைவிலிருக்கும் ஒன்றைக் குறிக்கும். நனவுநிலைக்கும் நனவிலிநிலைக்குமுரிய விடயங்கள் உளத்தில் காணப்படுவதில்லை. ஆனுல் முயன்ருல் முன்நனவிலிருப்பன நினைவுக்கு வரக் கூடும். புறெய்ட் எடுத்துக் காட்டும் முறையின்படி, நனவிலிநிலையிலுள்ளன எவ்வாறு முயன்ருலும் நினைவிற்கு வரமாட்டா. அப்படியிருந்தும் உளத்தின் மிக முக்கியமான பகுதி நனவிலி நிலையே என்று புறெய்ட் எடுத்துக் காட்டியுள்ளார். உளத்தை நீரில் நீந்தும் பனிக்கட்டிக்கு ஒப்பிட்டால் நீருக்குக் கீழுள்ள பகுதியை உணர்வின்மைக்கு ஒப்பாகக் கூறலாமென அவர் காட்டியுள்ளார். நீந்திவரும் பனிக்கட்டியில் பெரும்பகுதி நீருக்குக்கீழ் அமிழ்ந்துள்ளது

என்று நாம் அறிவோம். இப்படியாக நனவிலிநிலையிலுள்ளவற்றை நினைவுகூர முடியாதெனினும் உளநோய் மாத்திரமன்றி நாளாந்த வாழ்க்கைக்குரிய அநேகமான நடத்தைகளுமே நனவிலிச் செயற்பாடுகளினுல் நிர்ணயிக்கப்படுகின்றன என்று புறெய்ட் எடுத்துக் காட்டியுள்ளார். சில சந்தர்ப்பங்களிலே நாம் எம் ஆசைகளை அடக்கி விடுகின்றேம். ஆசைகளை அடக்குவதனுல் அவை அழிந்துவிடுவதில்லையென்றும் அவை நனவிலி நிலையை அடைந்து தொழிற்படுகின்றனவென்றும் புறெய்ட் கூறியுள்ளார். நரம்புநோய் போன்ற உளநோய்களினுல் பீடிக்கப்பட்டுள்ளவர்களுடைய நோய்க்குரிய காரணம் இப்படியாக அடக்கப்பட்ட ஆசைகளுடன் தொடர்புடையதெனப் புறெய்டுக்குத் தோன்றியது.

புறெய்ட் தந்துள்ள விளக்கத்தின்படி நனவிலி 'உலக' நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் விதிகளும் நனவு 'உலக' நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் விதிகளும் வேறுபட்டனவாகும். நனவிலி நிலையில் விவாதிக்கப்படும் முறை ஒரு சிறு குழந்தை விவாதிக்கும் முறையை ஒத்தது. சிறு குழந்தை விவாதிக்கும் போது, உண்மையுலகு நிலைமை பற்றிய விளக்கமற்றதாகவே அது விவாதிக்கின்றது என்பது நாம் அறிந்ததே. தனது ஆசையைப் பூர்த்தி செய்வதன் பொருட்டுக் குழந்தை ஆலோசிக்கும் முறைகள் சற்றேனும் செயற்படுத்த முடியாதனவாக இருக்கக்கூடும். நனவிலி நிலையில், ஓர் ஆசையைப் பூர்த்தி செய்வதற்கு இதனையொத்த ஒரு முறையே கைக்கொள்ளப்படுகின்றது. புறெய்ட் எடுத்துக் காட்டியுள்ளதன்படி நனவிலிநிலைசெயற்படும் முறையினைக் கனவு எடுத்துக் காட்டுகின்றது. கனவுகள் ஒருவருடைய ஆசைகளைப் பூர்த்தி செய்கின்றனவென்பது புறெய்டின் கொள்கை. இந்த உண்மையை ஓர் உதாரணத்தின் மூலம் நாம் விளங்கிக் கொள்ளலாம். ஒரு பெண், உயிருடன் இருக்கின்ற அவளுடைய மருமகன் ஒருவருடைய மரணத்துக்குச் சென்றதாக ஒரு கனவு கண்டாள். அவள் அந்த மருமகனிடத்திலே மிக அன்புடையவளாக இருந்தமையினுல், இப்படியான ஒரு கனவைத் தான் ஏன் கண்டிருக்கவேண்டும் என்று அவள் அதிக தூரஞ் சிந்தித்தாள். இக்கனவு பற்றிப் பின்னர் செய்யப்பட்ட ஆராய்ச்சியின்போது பின்வரும் உண்மை வெளிவந்தது. அப்பெண் கனவுகண்ட தினத்துக்கு முந்திய தினம் இன்னெரு மருமகனுடைய மரணத்துக்குப் போயிருந்தாள். அங்கே அவள் இளம் வைத்தியன் ஒருவனைக் கண்டாள். அவனிடத்திலே அவளுக்கு ஒரு விருப்பம் ஏற்பட்டது. அந்த வைத்தியனை மீண்டும் ஒரு முறை காணவேண்டும் என்ற ஆசை அவளுக்கு ஏற்பட்டது. அந்த ஆசையைப் பூர்த்தி செய்வதற்குரிய ஒரு வழியாகவே உயிருடன் இருக்கின்ற ஒரு மருமகனுடைய மரணத்துக்குச் சென்றதாக அவள் கனவு கண்டாள். நனவிலி நிலையின் பாற்பட்ட ஆசைகளைக் கனவுகள் எடுத்துக்காட்டுகின்றன என்றமையினுலே கனவுகள், நனவிலிநிலை

பற்றிய விபரங்களை அறிந்து கொள்வதற்குரிய ஒரு நல்ல வழி என்று புறொய்ட் கருதினர்.

கனவுகளைவிட, நாளாந்த வாழ்க்கையிலே ஏற்படும் மறதி, பேசும்போது அல்லது எழுதும்போது அல்லது வாசிக்கும்போது நாம் செய்யும் தவறுகள் மூலமும், நனவிலி நிலையின் பாற்பட்ட ஆசைகளை அல்லது உந்தல்களை விளங்கிக் கொள்ளலாமெனப் புறொய்ட் காட்டியுள்ளார். நனவிலிநிலையிலுள்ள ஓர் உந்தல் காரண மாக எப்படி மறதி ஏற்படுகின்றது என்பதனை நாம் ஓர் உதாரணத் தைக் கொண்டு விளங்கிக் கொள்ளுவதற்கு முயலுவோம். ஒரு பெண் அவளுடைய கணவனுக்கு வாசிப்பதற்கென ஒரு நூலைக் கொடுத்தாள். அவர்கள் இருவருக்குமிடையில் அப்போது ஒரு சிறு மனத்தாபம் இருந்தது. நூலைப் பெற்றுச் சிறிது நேரத்துக்குள் அதனை வைத்த இடத்தை அவன் மறந்து விட்டான். இதற்குப் பின்னர் அவனுடைய தாயார் சுகவீனமுற்று இருந்தபோது அவளை இவனு டைய மனைவி நன்கு கவனித்துச் சுகப்படுத்தினாள். இதனால் கணவன் மனைவி இருவருக்குமிடையிலிருந்த மனத்தாபம் நீங்கியது. மனத்தா பம் நீங்கியதும் அந்நூலை வைத்த இடம் அவனுக்கு ஞாபகம் வந்தது. இங்கே மனைவியிடத்திலிருந்த அன்பு இல்லாமைப் போனமையை மறதி எடுத்துக் காட்டுகின்றது. அவனுக்கு அந்நூல் அவனுடைய மனைவியைக் குறிக்கும் ஓர் அடையாளப் பொருளாக இருந்தது. அவளுடன் கொண்டிருந்த மனத்தாபம் நீங்கியதுடன் நூல் வைத்த இடத்தை ஞாபகப்படுத்திக் கொள்வதற்குக் குறுக்கீடாக இருந்த காரணமும் நீங்கியது.

கட்டுப்பாடற்ற சிந்தனை மூலமும் உணர்வின்மையில் மறைந் துள்ள உந்தல்களை வெளிவரச் செய்யலாமென நாம் ஆரம்பத்தில் கண்டோம். நோயாளிகளினுடைய உளப்பிரச்சினைகள் பற்றி விளங் கிக் கொள்ளுவதிலே கட்டுப்பாடற்ற சிந்தனையை விட அவர்களு டைய கனவுகள், மறதிகள் முதலியவற்றையும் புறொய்ட் பயன் படுத்தியுள்ளார்.

புறொய்ட் எடுத்துக் காட்டியுள்ளதன்படி, நனவு நிலையிலும் நனவிலி நிலையிலும் செய்யப்படுகின்ற செயல்கள் எல்லாம் ஏதோ ஒரு சக்தியைக் கொண்டே செய்யப்படுகின்றன. அச்சக்தியைப் புறொய்ட் இயல்பூக்கம் (*Instinct*) என்ற பதத்தைக் கொண்டு குறிப்பிட்டார். இயல்பூக்கங்கள் உடற்றேவைகள் காரணமாகவே ஏற்படுகின்றன என்று புறொய்ட் கருதினர். எடுத்துக் காட்டாகப் பசியை எடுத்துக் கொள்வோம். உடற்றேவை காரணமாகவே பசியெனும் இயல்பூக்கம் உண்டாகின்றது. இப்படியாக, உடற் றேவை காரணமாக ஏற்படுகின்ற இயல்பூக்கங்கள் பலவுள. ஆனால், புறொய்ட் இயல்பூக்கங்கள் எல்லாவற்றையும் இரண்டு முக்கியமான பகுதிகளாகப் பிரித்துள்ளார். அவை வாழ்க்கை இயல்பூக்கங்கள் (*Life Instincts*) மரண இயல்பூக்கங்கள் (*Death Instincts*) எனப்படும்.

வாழ்க்கை இயல்பூக்கங்கள் என்பன சீவியத்தின் பொருட்டான இயல்பூக்கங்களாகும். பசி காரணமாக உணவு தேட முற்படு கின்றோம். அதனாலே அது ஒரு வாழ்க்கை இயல்பூக்கமாகும். வாழ்க்கை இயல்பூக்கங்களுள் பால் இயல்பூக்கங்களுக்குப் புறொய்ட் முக்கிய இடங் கொடுத்தார். மரண இயல்பூக்க மெனப்படுவது அழிக்கவேண்டும் எனும் இயல்பூக்கமாகும். கலகஞ் செய்யுமியல் பானது மரண இயல்பூக்கத்தைக் காட்டுகின்றதெனப் புறொய்ட் கருதினார்.

இயல்பூக்கச் செயல்கள் முக்கியமாக நனவிலி நிலையிலே செய்யப் படுகின்றனவென்று புறொய்ட் எடுத்துக் காட்டியுள்ளார். தனி மனிதன் பற்றிய விபரங்களை ஆதாரமாகக் கொண்டே இயல்பூக்கங் கள் எப்படிச் செயற்படுகின்றன வென்றும், உளநோய்கள் உண்டா வதற்கு அவை எங்ஙனம் காரணமாகின்றன வென்றும் புறொய்ட் விளக்கினார். தனிமனிதன் பற்றிப் புறொய்ட் கொண்டிருந்த கருத் தினை மேல்வரும் அத்தியாயங்களிலே பரிசீலனை செய்ய உத்தேசித் துளோமாதலின் அதனை இங்கே மேற்கொள்ளாது விட்டுச் செல் வோம்.

**காள் யுங்கினுடைய (1875-1961) பகுப்பு உளவியல்முறை**

சுவிஸ் நாட்டு உளவியலறிஞரான யுங், கனவு விளக்கம் பற்றிப் புறொய்ட் எழுதி வெளியிட்ட நூலை வாசித்த பின்னர் உளப்பகுப் பிலே ஆர்வங் கொண்டார். 1907 இல் புறொய்ட்டைச் சந்தித்த இவர் அவரைப் பின் பற்றி ஆராய்ச்சிகள் செய்தார். ஆனால் 1914 ஆம் ஆண்டளவில், சிற்சில கருத்துக்களைப் பொறுத்த மட்டிலே புறொய்ட் கூறியவற்றிலிருந்து வேறுபட்ட கருத்துகளை இவர் கூறினார். அதனாலே இவர்களுடைய நட்புப் பாதிக்கப்பட்டது மாத்திரமன்றி, யுங் உளப்பகுப்புவாத ஆராய்ச்சியையும் கைவிட் டார். பின்னர் பகுப்பு உளவியல் எனும் புதிய கொள்கையை உருவாக்கி விளக்கினார்.

உள நோய்களைப் பொறுத்தமட்டிலே, ஒருவருடைய கடந்த கால அனுபவங்களிலே கவனம் செலுத்தும் முறையை யுங் நிரா கரித்தார். உள நோய்கள் உண்டாவதற்கு நிகழ்காலக் காரணி களும் முக்கியத்துவமுடையன வென்று யுங் காட்டியுள்ளார். மேலும் நனவிலிச் செயல்களுக்குக் 'குழந்தை' முறையிலோ 'நியாய மற்ற' முறையிலோ விளக்கங் கூறுவதற்கும் யுங் இசையவில்லை. நனவிலிச் செயல்கள் சில அமைப்பு வேலைகளுக்கு உதவியாக அமை கின்றனவென்று யுங் காட்டியுள்ளார்.

ஆயினும், யுங்கும் புறொய்ட் போல உணர்விலாச் செயல்களிலே கவனஞ் செலுத்தினார்.

**அல்பிறட் அட்லரின் (1870-1937) தனியாள் உளவியல்**

வியன்னுவைச் சேர்ந்த உளவியலறிஞரான அட்லர், புறெய்ட்டைப் பின்பற்றிய முதல் உளவியலறிஞராவார். அவர் 1902 ஆம் ஆண்டளவில் புறெய்டைச் சந்தித்து உளப்பகுப்புப் பற்றிக் கருத்துப் பரிமாறினுர். அட்லர், 1911 இல் உளப்பகுப்பு வாத மரபை விட்டு நீங்கினுர்.

மனிதனுடைய சீராக்கத்திலே அவனுடைய இயல்பூக்கங்களை விடச் சூழலும், சமுதாயமும் முக்கியத்துவமுடையன என்ற கருத்துக்காரணமாகவே அட்லர் விளக்கிய தனியாள் உளவியற் கொள்கை ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. சூழலும் சமுதாயமும் முக்கியமுடையன என்ற கருத்துக் காரணமாகவே நனவிலிநிலை பற்றி அட்லர் அதிக கவனஞ் செலுத்தவில்லை. அவருடைய நம்பிக்கையின்படி, வளர்ந்தவர்களுடைய உதவியின்றி ஒரு சிறு குழந்தை எதனையும் செய்யும் வல்லமையற்றதாகும். இது அதனிடத்திலே ஒருகுறைபாடாக அமைகின்றது. அக்குழந்தை படிப்படியாக வளரும்போது, இக்குறைபாடு மேற்கொள்ளப்படுகின்றது. மனிதனுடைய செயல்கள், அவனுடைய பால் இயல்பூக்கத்தை விடக் கலகஞ் செய்யும் இயல்பூக்கத்தையே பெரும்பாலும் திருப்தி செய்கின்றன. பாதுகாப்புக்கு மனிதன் முக்கியத்துவம் கொடுக்கின்றுன். பால் நடத்தைகளிலே தன்னுடைய மனைவியைத் தனது ஆதிக்கத்துக்குள் அடக்குவதற்கு மனிதன் முயலுகிறுன். இப்படியாக அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் குறைபாட்டைப் போக்குவதற்கும் உள்ள உந்தல் மனிதனுடைய அபிவிருத்திக்குக் காரணமாகின்றது என்றும் அட்லர் எடுத்துக் காட்டியுள்ளார்.

எரிக் புறேம், கறன் ஹோனி, சுலிவான் போன்ற உளவியலறிஞருமே உளநோய்களைப் பற்றி விளங்கிக் கொள்வதிலே சமூகக் காரணிகளுக்குள்ள முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டியுள்ளனர்.

உளப்பகுப்புவாத மரபுக்கு மாறுகப் பல கண்டனங்கள் எழுந்துள்ளன. அவற்றுள் பிரபலமான கண்டனம், உளப் பகுப்புவாதக் கருத்துக்கள் அறிவியல் முறையில் அமையவில்லையென்பதாகும். குறிப்பாக, நடத்தைவாத உளவியலறிஞரே இவ்வாறு கண்டித்தனர். புறெய்ட் தமது சில கருத்துகளை, தனிப்பட்ட அனுபவத்தை மாத்திரமே அடிப்படையாக கொண்டு விளக்கினுரென்றும், சில கருத்துகள் நன்நடத்தை முறைக்கு முரணுனவை என்றும் அக்காலத்தில் கண்டிக்கப்பட்டது. பால் சம்பந்தமாகப் புறெய்ட் கூறிய கருத்துகள் பற்றியே இக்கண்டனங்கள் பெரும்பாலும் கூறப்பட்டன. புறெய்ட்டின் கருத்துகளுக்கு மாறுக உளப்பகுப்பு வாதிகள் கூறிய சில கண்டனங்கள் பற்றி நாம் ஆரம்பத்திலே ஆராய்ந்தோம்.

இப்படியான கண்டனங்கள் கூறப்பட்ட போதிலும், உளப் பகுப்புவாத மரபினர், உளவியலுக்கு அளப்பரிய சேவை செய்

துள்ளனர் என்பதனை மறந்துவிடலாகாது. மனிதனுடைய நடத்தையை விளங்கிக் கொள்வதிலே நனவிலிச் செயல்களுக்குள்ள முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டியமையும், தனிப்பட்ட அபிவிருத்தியிலே இளம்பராயத்து அனுபவங்களுக்குள்ள முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டியமையும், உள நோய்களைப் பொறுத்த மட்டிலே பால் இயல்பூக்கங்களும் உளச் சேர்க்கைகளும் எப்படிக் காரணங்களாகின்றன என்பதை எடுத்துக் காட்டியமையும் இவர்கள் ஆற்றிய சேவைகளுள் குறிப்பிடத்தக்க சிலவாகும்.

මනෝවිද්‍යා මූලිකාංග – 1 වන කොටස (දෙමළ)